வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வாரமலர்

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 253 | பக்கங்கள் : 20



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றும்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



**07** ஜெயாவுக்கு ரஜினிகாந்த் போட்டி ஆகி இருப்பார்



**08** அதிகாரப் பரவலுக்கு எதிரான கருத்துகள்



**09** எவிடம் எவிடம், மதமடி மதமடி! எவிடம் எவிடம், மலையடி மலையடி!



**11** புத்த விகாரை எழுப்ப மக்கள் எதிர்ப்பு!

## சர்வதேச அழுத்தம் மட்டுமே இனப்பிரச்னையைத் தீர்க்கும்!

### வலியுறுத்துகின்றார் சுரேஷ்



யாழ்ப்பாணம், ஓக. 20

தமிழர்களின் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் சர்வதேச சமூகம், இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் இலங்கையில் அச்சமின்றி வாழ்வதற்கு அவர்களின் வாழ்வுரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பது தொடர்பில் விளக்கும் அளிக்கும் வகையில் சர்வதேச சமூகம் செயற்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் நடைபெற்ற பொழுது தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை 19

# வடக்கு மாகாணத்தில் மாத்திரம் 50 வைத்தியர்கள் வெளியேற்றம்

## மிகப்பெரும் சவால் என்கிறார் மாகாண சுகாதார பணிப்பாளர்



வவுனியா, ஓகஸ்ட் 20

வடக்கு மாகாணத்தில் ஒருவருடத்தில் மாத்திரம் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் கூறினார். 19

## மின்சார சபை ஊழியர்கள் நாளை பெரும் போராட்டம்

கொழும்பு, ஓக. 20

நிரந்தர நியமனம் வழங்கப்படாத மின்சாரத் துறை ஊழியர்கள் உடனடியாக நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரிபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை இந்த போராட்டத்தை இவர்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

மின்சாரத்துறையில் 6 வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் 912 ஊழியர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென இவர்கள் போராடி வருதுடன், அமைச்சர் காஞ்சன விஜேசேகரவை சந்திப்பதற்கும் 19

## செம்மணி வளைவு அருகே விபத்து: கணவன் பலி! மனைவி படுகாயம்!!

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணம், ஏ-9 வீதியில் நேற்று மதியம் மோட்டார் சைக்கிளும், பொலிஸாரின் தண்ணீர் பவுசரும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவன் உயிரிழந்தார். மனைவி படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதி செம்மணி வளைவிற்கு அண்மையாக இந்த விபத்து நடந்தது.

இளம் தம்பதி மோட்டார் சைக்கிளில் வந்த போது, பொலிஸாரின் தண்ணீர் பவுசருடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இதில் கணவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புவனேஸ்வரன் மனோஜ் (வயது-31) என்ற கொக்குவில் கிழக்கைச் 19

## மாகாண அதிகாரங்களை பரவலாக்க நிபுணர் குழு சர்வதேசத்தை ஏமாற்றும் ஜனாதிபதியின் தந்திரம்!

### கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஓக. 20

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஒரு நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது இந்த நாட்டு மக்களை மாத்திரமல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நாங்கள் பார்க்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் மத்தியிலும் இன்று பேசு பொருளாக மாறியிருக்கின்ற விடயம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் 19

## கணிதப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் கிளிநொச்சியில் மரணம்

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப் பிரிவில் முதலிடம் பிடித்த மாணவன் உயிரை மாய்த்துள்ளார். நேற்று இந்த சம்பவம் நடந்தது.

சந்திரமோகன் தேனுஜன் (வயது-22) என்ற மாணவனே உயிரிழந்தார். கிளிநொச்சி விவேகானந்த நகர் பகுதியை சேர்ந்த இந்த இளைஞன் நேற்று தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். 19

## வறட்சியால் நாட்டில் 2,11,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 20

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது. 19

## சுகாதார அமைச்சரைப் பதவி நீக்க நாடு முழுக்க கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஓக. 20

சுகாதார அமைச்சருக்கு எதிராக பாராளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய மக்கள் சக்தியினர் நாடு முழுவதும் கையெழுத்து வேட்டையை முன்னெடுத்து வருகின்றனர்.

நாடு முழுவதிலும் உள்ள 19

### வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு

## பொதுப் பொறிமுறைக்குள் வர மறுத்துவருகிறது சீனா

கொழும்பு, ஓக. 20

இலங்கையின் வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் செயற்பாடுகளில் ஏனைய கடன் உரிமையாளர்களுடன் பொது பொறிமுறைக்குள் வருவதை சீனா தொடர்ந்தும் நிராகரித்து வருவதாக தெரியவருகிறது.

சீனா, இலங்கையின் பிரதான இரு தரப்பு 19

# இப்படியும் நடக்கிறது

டான் ரீ. வியின் நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஒருவர் எதிரே வந்தார். மிகுந்த பரபரப்பாக காணப்பட்ட அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன்.

‘இல்லை, இன்று மூன்று மணிக்கு ஒளிப்பதிவு. ஓர் அரசியல்வாதி நிகழ்ச்சியில் கலந்துகொள்வதாக உறுதியளித்திருந்தார். கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டார்’ என்றார் கோபத்துடன்.

அப்போது மற்றுமொருவர். அவரும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்தான். அவர் சொன்ன தகவல் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

அவர் ஒரு மூத்த அரசியல்வாதி. அப்போது அவர் இராஜாங்க அமைச்சராக இருந்தார். கொழும்பில் இவர் போல நிகழ்ச்சிக்கு ஒளிப்பதிவுக்காக வருவதாக உறுதியளித்தவர்கள் கடைசி நேரத்தில் வராமல் விட்டுவிட்டால், எப்படியும் யாரையாவது பிடித்து ஒளிப்பதிவு செய்யாவிட்டால், அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்ப முடியாமல் போய்விடும் என்பதால், கேட்ட உடனே வரக்கூடிய சிலரில் அந்த இராஜாங்க அமைச்சரும் இருந்தாராம்.

ஒருநாள் அவரை அழைப்பதற்காக தொலைபேசி எடுத்தபோதெல்லாம், அவரது உதவியாளர்தான் பேசியிருக்கிறார்.

‘அமைச்சர் ‘பிசி’யாக இருக்கிறார். பிறகு எடுங்கள்’ என்றிருக்கிறார் அந்த உதவியாளர். ஒன்றுக்கு பல தடவை எடுத்தபோதிலும் ஒரே பதில்தான்.

இவர் வேறு ஒருவரை ஒருவாறு ஏற்பாடு செய்து நிகழ்ச்சி ஒளிப்பதிவும் முடிந்து விட்டது.

இரவு அமைச்சர் இவரை அழைத்து, ‘என்ன.. அடிக்கடி எடுத்து தேடினீர்களாமே?’ என்று கேட்டிருக்கிறார்.

இவர் விசயத்தை சொல்ல, அவர் தன்னிலை மறந்து சொல்லியிருக்கிறார், ‘பகல் முழுக்க சும்மாதானே இருந்தனான், சொல்லியிருக்கலாமே’ என்று.

பகல் முழுக்க சும்மா இருந்தவர், உதவியாளருக்கு யார் எடுத்தாலும் ‘பிசி’யாக இருப்பதாக சொல்லு என்றிருக்கிறார். அவரும் கிளிப்பிள்ளைபோல எல்லோருக்கும் சொல்லியிருக்கிறார்.

இந்தக் கதையை இப்போது நிகழ்ச்சிக்கு வருவதாக கூறியவர் வராததால் தடுமாறிக்கொண்டிருந்த தயாரிப்பாளரிடம் கூறினேன்.

அதற்கு அவர் சொன்னார், ‘அது பரவாயில்லையே மனுசன் வேலையில்லாமல் இருந்தாலும் பிசியாக காட்டுவதற்காக அப்படிச் சொல்லியிருக்கிறார். ஆனால், இன்று வருவதாக சொன்னவர் கடைசி நேரத்தில் வரமுடியாது என்று சொல்லியிருந்தாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், அவரோ ஒன்றுக்கு மூன்று தடவை வருவதாக சம்மதம் தெரிவித்துவிட்டு, இப்போது கடைசி நேரத்தில் ஆளைக் காணவில்லையே என்று போன் எடுத்துக் கேட்டால், ‘இப்படி கடைசி நேரத்தில் கேட்டால் எப்படி வருவது?’ என்றல்லவா கேட்கிறார்.

அவரிடம் போய், ஏற்கனவே ஒரு நாளல்ல மூன்று நாட்களாக உங்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டு தானே இருந்தேன் என்று எப்படி சொல்வது?’ என்றார்.

அப்போது நான் சொன்னேன்:

‘அது அவர் பிரச்னை இல்லையே. அவர் பற்றி உமக்கு தெரியாதது உம்முடைய பிரச்னைதானே’ என்று.

நடிகர் விஜயகாந்த், ஒரு காலத்தில் ஓகோ என்று திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவர், அந்தத் திரையுலக பிரபலம் அவரை அரசியல்வாதியாக்கியது.

அரசியலிலும் அவர் யாருடன் கூட்டுச் சேர்கிறாரோ அவர்களே ஆட்சியைப் பிடிக்கலாம் என்றளவு உயரத்துக்கு வளர்ந்தார்.

ஆனால், இன்று ஒரு நோயாளியாகிவிட்ட போதிலும், அவரது கட்சி அவரை வைத்தே இன்றும் அரசியல் செய்யவேண்டியிருக்கின்றது. அதற்காக அவரது நோயை விமர்சிக்கிறோம் என்பதல்ல. அவர் அவரது கட்சிக்கு ஓர் அடையாளம் என்பதால் அவரைக் காட்டியே அரசியல் செய்யவேண்டிய தேவை அவரின் கட்சிக்கு உண்டு.

ஆனால், நமது அரசியலில் அப்படி யாரும் இல்லை. அவர்கள் யாராக இருந்தாலும் தம்மால் முடியாவிட்டால், அரசியலில் இருந்து ஒதுங்கி மற்றவர்களுக்கு வழிவிடவேண்டும்.

அந்தத் தலைவர் யார் என்பதை இங்கே நான் எழுதவில்லை என்பதற்காக நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உங்கள் விருப்பத்துக்கு ஏற்றமாதிரி, அவர் ஆக இருக்குமோ இவர் ஆக இருக்குமோ என்று நமது தலைவர்கள் எல்லோரையும் குறைத்து மதிப்பிட்டுவிடாதீர்கள்.

**- ஊர்க்குருவி.**

# பிரசவித்த குழந்தையை வைத்தியசாலைக்குள்ளேயே போட்டுவிட்டு மதிலேறித் தப்பியோட முயன்ற பெண்!

வவுனியா, ஓக. 20

மஹியங்கனை வைத்தியசாலை வளாகத்துக்குள் தான் பெற்றெடுத்த சிசுவை கைவிட்டுச் சென்ற வவுனியாவை சேர்ந்த பெண் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 16ஆம் திகதி அவர் குழந்தையை பிரசவித்தார். நேற்று முன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

தற்போது மஹியங்கனையில் வசிக்கும் ஐந்து பிள்ளைகளின் தாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட பெண்ணுக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் உள்ளனர். மூன்றாவது குழந்தையைப் பெற்றெடுக்கும்போது கணவர் தன்னை விட்டுச் சென்றதாக பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மஹியங்கனைக்கு அருகில் உள்ள வீட்டுக்கு வந்த தான் மீண்டும் திருமணம் செய்து கொண்டதாகவும் அந்த திருமணத்தில் இரண்டு குழந்தைகளைப் பெற்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

கர்ப்பத்தை தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தபோதிலும் தான் கர்ப்பமானதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த 16ஆம் திகதி ஏற்பட்ட காயம் காரணமாக அவரது பிள்ளைகளில் ஒருவர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த தாய் தனது பிள்ளையுடன் வைத்தியசாலையில் தங்க வேண்டியிருந்தது.

ஆனால், மருத்துவமனையில் இருந்தபோதே அவருக்கு குழந்தை பிறந்தது. இதுபற்றி யாருக்கும் தெரிவிக்காமல் குழந்தையுடன் மருத்துவமனையை விட்டு ஓட முடிவு செய்ததாகக் கூறியுள்ளார்.

அவர் பிரசவமான சிசுவை அக்குளில் வைத்துக்கொண்டு மருத்துவமனையின் சுவர் ஏறி குதிக்க முயன்றுள்ளார். ஆனால், சிசு சுவரில் இருந்து தவறி விழுந்தது. அதன்பிறகு அவர் சிசுவை கவனிக்காமல் அமைதியாக தனது பிள்ளை சிகிச்சை பெறும் விடுதிக்கு திரும்பினார்.

பின்னர் சிசு அழும் சத்தம் கேட்டு வைத்தியசாலை ஊழியர்களால் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

விடுதியில் இந்தப் பெண்ணுக்கு அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டதால் சந்தேகத்தில் அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் உண்மை தெரிய வந்தது. (அ)

# ஹோமாகமையில் தீப்பற்றி எரிந்த இரசாயன தொழிற்சாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக. 20

ஹோமாகமையில் தீப்பற்றி எரிந்த இரசாயன தொழிற்சாலைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் அனுமதிப்பத்திரம் இன்றி குறித்த தொழிற்சாலை இயங்கி வந்துள்ளமை தெரிய வந்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த இரசாயன தொழிற்சாலையில் தீ பரவியதால் சுற்றாடலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலையில் இரசாயனங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஏற்பட்ட வெடிப்புடன் தீ பரவியதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் பரவிய தீ நேற்று முன்தினம் அதிகாலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.(அ)

# காலி முகத்திடலில் உணவு விற்பனையில் ஈடுபடுவோருக்கு அடையாள அட்டைகள்!

கொழும்பு, ஓக. 20

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள உணவு விற்பனையாளர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பதிவு செய்யப்பட்ட உணவு விநியோகஸ்தர் எனும் அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளநீர் விற்பனையாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் விற்பனை செய்வோரை அடையாளங்கண்டு, அவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கவுள்ளதாக கொழும்பு நகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

அத்துடன், அவர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் இதனூடாக உணவு பாதுகாப்பு, உத்தியோகபூர்வ ஆடை என்பன தொடர்பில் அவர்களுக்கு தெளிவூட்டி வாய்மொழி மூல கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்குவோருக்கு அடையாள அட்டைகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த அடையாள அட்டைகள் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகுமென கொழும்பு நகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி மேலும் தெரிவித்தார். (அ)

# உயர்தர பரீட்சை பெறுபேறு இம்மாத இறுதியில்

கொழும்பு, ஓக. 20

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறு பேறுகளை வெளியிடுவதற் கான இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை பெறு பேறுகளை இந்த மாத இறுதி யில் வெளியிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையின் விடைத்தாள் முதற்கட்ட மதிப்பீட்டுப் பணிஷகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான விடைத்தாள் மதிப்பீட்டாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரும் நடவடிக்கை எதிர்வரும் மாதம் முதலாம் திகதி வரை இடம் பெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# வெளிநாடுகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்புக்குப் பிரதிநிதிகள்!

கொழும்பு, ஓக. 20

வெளிநாடுகளுக்கான முதலீட்டு ஊக்குவிப்பு பிரதிநிதிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அந்தப் பிரதிநிதிகள் ஊடாக இலங்கைக்கு முதலீடுகளை பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

வெளிநாடுகளில் பணிபுரியும் அல்லது சுயதொழில் புரியும் இலங்கையர்களை முதலீட்டு ஊக்குவிப்பு பிரதிநிதிகளாக நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# 5 குழந்தை இருதயநோய் நிபுணர்களே நாடு முழுவதும் கடமையில் உள்ளனர்

## 6 பேர் வெளிநாடு பறந்தனர்

கொழும்பு, ஓக. 20

**இலங்கையிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் கடமையிலிருந்த 11 குழந்தை இருதயநோய் நிபுணர்களில் 6 பேர் வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர். இதனால் தற்போது 5 நிபுணர்கள் மட்டுமே கடமையில் உள்ளனர்.**

இலங்கை பொருளாதார நெருக்கடி, அதனால் பெறப்பட்ட ஜஎம்எப் உதவி, அதன் நிபந்தனைகள் போன்ற பல்வேறு காரணங்களினால் இலங்கையிலிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. வைத்தியர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளின் கட்டமைப்பின் அடிப்படையில், தற்போது முழுத் தகுதி பெற்ற குழந்தை இருதயநோய் நிபுணர்களின் நிலையான எண்ணிக்கை 20ஆக இருக்க வேண்டும். இருப்பினும், தற்போது 11 பேர் மாத்திரமே கடமையிலிருந்தனர். இவர்களில் 6 பேர் வெளி நாடு சென்றுவிட்டனர்.

தற்போது, குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் குருநாகல் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் ஐந்து முழுத் தகுதியுள்ள சிறுவர் இருதயநோய் நிபுணர்கள் மட்டுமே உள்ளனர்.

நிபுணர்களின் வெளியேற்றத்தையடுத்து ஏற்பட்டுள்ள பற்றாக்குறையானது மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக மூத்த குழந்தை இருதயநோய் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

“குழந்தைகள் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு பரிந்துரைக்கப்படுவது இயல்பானது என்றாலும், எண்ணிக்கையில் சமீபத்திய அதிகரிப்பு நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக இருக்கலாம்” என அவர் கூறினார்.

லேடி ரிட்ஜ்வே வைத்திய சாலையில் கடமையில் உள்ள நான்கு குழந்தை இருதயநோய் நிபுணர்களில், இருவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இது இருதய சிகிச்சை சேவைகளை நிர்வகிப்பது தொடர்பான கவலைகளை மேலும் அதிகரிக்கிறது.

மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை ஒரு முக்கியப் பிரச்னையாக இருப்பதால் சுகாதாரத் துறை தொடர்பான பல்வேறு பிரச்னைகளில் சுகாதார அதிகாரிகள் போராடி வருகின்றனர். (அ)

# கோழி இறைச்சி விலை குறையும்?

கொழும்பு, ஓக. 20

சோளத்திற்கான இறக்குமதி வரியை குறைக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையால் எதிர்காலத்தில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியை 1200 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் சோளத்தை இறக்குமதி செய்ய வாய்ப்பு உள்ளதாக அதன் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

இந்த சலுகைகள் மூலம் எதிர்காலத்தில் ஒரு முட்டையை 40 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# ஜெரோம் பெர்னாண்டோவின் கருத்துக்காக பிக்குகளிடம் மன்னிப்பு கோரிய பெற்றோர்!

கொழும்பு, ஓக. 20

புத்த மதம் மற்றும் புத்தர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர் நேற்று தமது மகனின் கருத்துக்கு மன்னிப்பு கோரியுள்ளனர்.

ராமன்ய மகா நிகாயாவின் சங்கத் தலைமையகத்திற்கு வந்து ஓமல்பே சோபித தேரரை நேரில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர்கள் தமது மகனின் கூற்றினால் பௌத்த மத குருமாருக்கும், பௌத்த மத மக்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மகா சங்கத்தினரிடமும், முழு பௌத்த சமூகத்திடமும் மன்னிப்புக் கோருவதற்காக வந்திருந்தனர்.

இதன்போது இரு தரப்பினருக்கும் இடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது. பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஓமல்பே சோபித தேரர், தவறை புரிந்து கொண்டு விவாதத்திற்கு வந்தால் பௌத்த சமூகமாக மன்னிக்க தயார் எனவும் தெரிவித்தார்.

முதல் கட்ட கலந்துரையாடல் சுமுகமாக முடிவடைந்ததாகவும், இந்த கலந்துரையாடல் தொடரும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

அப்போது ஜெரோம் பெர்னாண்டோவின் தாயார் பெவின் பெர்னாண்டோ ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

தனது மகனின் கருத்துக்கள் ஏதேனும் காயத்தை ஏற்படுத்தியிருந்தால், பெரியவர், சிறியவர் என அனைவரிடமும் கோடி முறை மன்னிப்பு கேட்பேன் என்று கூறியுள்ளார்.

தமக்கு இந்த வாய்ப்பை வழங்கிய ஓமல்பே சோபித தேரருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வாக்காளர் பட்டியலை சரி பார்க்க சந்தர்ப்பம்

கொழும்பு, ஓக. 20

2023 இல் வாக்காளர்கள் பெயர் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

கிராம அலுவலரிடம் அல்லது www.elections.gov.lk இணையத்தளத்திற்குச் சென்று விவரங்களைச் சரிபார்க்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பதிவேட்டில் இருந்து தகுதியான வாக்காளர்கள் யாரேனும் விடுபட்டிருந்தால், செப்ரெம்பர் 4ஆம் திகதிக்கு கிராம அலுவலரை தொடர்புகொள்ளவேண்டும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. (அ)

# ஐக்கிய தேசிய கட்சியில் அதிரடி மறுசீரமைப்புகள்

## 4 பதவிகளை தவிர ஏனையவை ‘அவுட்’!

கொழும்பு, ஓக. 20

பிரதான நான்கு பதவிகளைத் தவிர கட்சியின் ஏனைய பதவிநிலைகளை இல்லாது செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது என அறியமுடிகின்றது.

இதன்படி தலைவர், தவிசாளர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் மாத்திரமே இருக்கும். பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகள் நீக்கப்படும்.

இதற்கு பதிலாக மேற்படி பதவிகளை வகித்தவர்கள் உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் அதிஉயர் அதிகார குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கேற்ற வகையில் கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆண்டுவிழா செப்ரெம்பர் 10 ஆம் திகதி கட்சி தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொண்டாடப்படவுள்ளது. இதன்போது கட்சியின் புதிய யாப்புக்கும் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

# ஆசனவாய்க்குள் தங்க ஜெல்லை வைத்து இந்தியாவுக்கு கடத்த முயன்றவர் கைது!

கொழும்பு, ஓக. 20

தங்க ஜெல் நிரப்பப்பட்ட 3 வில்லைகளை மிக நுணுக்கமான முறையில் உடலுக்குள் மறைத்து வைத்து வெளிநாட்டுக்கு பயணிக்க வந்த விமானப் பயணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகளால் இலங்கை பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மொஹமட் சிஹாப் நபுஹான் என்ற 29 வயதான இந்த நபர், தங்கம் அடங்கிய 03 வில்லைகளை தனது ஆசன வாய்க்குள் மறைத்துக் கொண்டு செல்ல முயன்றுள்ளார்.





இவ்வாறு சந்தேகநபரின் உடலினுள் கண்டெடுக்கப்பட்ட தங்கம் அடங்கிய மூன்று வில்லைகள் 1.28 கிலோ எடையுள்ளதாகவும், அவற்றில் தங்க ஜெல் இருந்ததாகவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் 01 132 மூலம் இந்தியாவின் மும்பை செல்வதற்காக இந்த நபர் நேற்று முன் தினம் இரவு விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

இவர் கொழும்பு கெசல்வத்தை பிரதேசத்தில் வசிப்பவர்.

அவர் மீதான சந்தேகத்தின் அடிப்படையில் அவரை எக்ஸ்ரே பரிசோதனைக்கு உட்படுத்தியபோது மலக்குடலில் தங்க ஜெல் கரைசல் இருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த ஜெல் கரைசலை தங்கமாக மாற்றும் தொழில்நுட்பம் தற்போது இந்தியாவில் மட்டுமே உள்ளதாக சுங்க போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஜெல் கரைசல் அடங்கிய வில்லைகள் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க வளாகத்தில் உள்ள இரத்தினக்கல் மற்றும் ஆபரண அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ)

# 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்

கொழும்பு, ஓக. 20

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பாக விவாதிக்கப்பட்டு பாராளுமன்றின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 23ஆம் திகதி இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் கொழும்பு துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளது.

24ஆம் திகதி அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம் தொடர்பாகவும், சிறீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் இடம்பெறும் என பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்க தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம்!

## வலியுறுத்துகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஓக. 20

"நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணைக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம். அவ்வாறான வேலைத்திட்டத்துக்கு ஆதரவு வழங்க தயார்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள விசேட அறிவிப்பில் கூறியவை வருமாறு:

நாட்டில் பொருளாதார மற்றும் சமூக அழிவு நடைபெற்று வருகின்றது. சுமார் 60, 000 குடும்பங்கள் சுத்தமான குடிதண்ணீரை இழந்துள்ளன. வறட்சி காரணமாக இலட்சக்கணக்கான ஹெக்டயர் விவசாய நிலங்கள் அழிவடைந்துள்ளது. விவசாயிகள் உட்பட ஒட்டுமொத்த உழைக்கும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

5,000 பாடசாலை ஆசிரியர்களும் ஏராளமான மருத்துவ நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதனால், மருத்துவமனைகளின் விடுதித் தொகுதிகள் மூடப் பட்டு அறுவைச் சிகிச்சைகள் கூட இரத்து செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாடு கொண்ட தேசிய வேலைத்திட்டமொன்று அவசியம்.



வீழ்ந்த நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் இருந்தால், எதிர்க்கட்சியாக அனைவரும் அதிகபட்ச ஆதரவை வழங்க விரும்பினாலும் அவ்வாறான வேலைத்திட்டமொன்று தற்போதைய அரசாங்கத்திடம் இல்லை .

அரசாங்கம் விளையாடும் இந்த அரசியல் சூதாட்டங்களை தவிர்த்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்கவேண்டும். இதற்கான அறிவு அரசாங்கத்திற்கு இல்லையென்றால், எதிர்க்கட்சியிடம் இருக்கும் இதற்குத் தேவையான அறிவையும், மனித வளத்தையும் வழங்க விரும்புகின்றோம்.

பதவிகளுக்கு அடிமைப்பட்டு நாட்டையும் மக்களையும் காட்டிக்கொடுக்க நாம் தயாரில்லை. இது போன்ற தேசத்துரோக அரசியல் பேரங்களை நீங்கள் செய்ய விரும்பினால்,வேறு யாரையாவது பார்த்துக்கொள்ளுங்கள். நாட்டின் தேசிய நலனை புறந்தள்ளி விட்டு பெருந்தீனி அரசியலை பின்பற்ற ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இல்லை - என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பு மீளாய்வு விரைவில் ஆரம்பிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, ஓக.4

தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் காலநிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு, விரிவான தேசிய பாதுகாப்பு மீளாய்வு ஒன்றை ஆரம்பிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கடற்படை பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன் தேசிய பாதுகாப்புச் சபைக்கான நவீன பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குவதற்கான மீளாய்வை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வாழ்த்து



யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தராக, மீண்டும், பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா நியமிக்கப்பட்டுள்ளமைக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பேராசிரியர் சிறிசற்குணராஜாவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கும் வகையில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன் தினம் மாலை பல்கலைக்கழக வளாகத்தில் வெடி கொழுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (அ)

# மின்சக்தி அமைச்சருடன் ஜெய்க்கா குழு சந்திப்பு

கொழும்பு, ஓக. 20

மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கும் ஜெய்க்கா எனப்படும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவரகத்தின் அதிகாரிகளுக்கும் இடையே நேற்று முன் தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மின்சக்தி துறையின் மறுசீரமைப்பு தொடர்பில் இந்த கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வலு சக்தி அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த முகவரகத்தின் நிதி அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்பு தொடர்பான துணைத் தலைவர் மெகுமி முடோ மற்றும் அந்த முகவரகத்தின் இலங்கை அலுவலக பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சு.கவின் வருடாந்த மாநாட்டை நடத்துவதில் பெரும் குழப்பம்!

கொழும்பு, ஓக. 20

ஹெட்டிபொலவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டு மாநாட்டை கொழும்பில் நடத்தத் தீர்மானித்தமை கட்சிக்குள் கருத்து மோதலை ஏற்படுத்தியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும் இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டை எதிர்வரும் 2ஆம் திகதி ஹெட்டிபொலவில் நடத்துவதற்கு முதலில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் பின்னர் அந்த தீர்மானம் திடீரென மாற்றப்பட்டு 3ஆம் திகதி ஸ்ரீஜயவர்தனபுர மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் ஆண்டு விழா மாநாட்டை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

ஹெட்டிபொலவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த மாநாடு திடீரென இரத்துச் செய்யப்பட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி எம்.பி.க்களின் வேண்டுகோளுக்கு இணங்க கொழும்பில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவிடம் வினவிய போது, கொழும்பு ஹெட்டிபொலவில் நடைபெறவிருந்த வருடாந்த மாநாட்டை இடமாற்றம் செய்வதில் தனக்கு விருப்பமில்லை எனத் தெரிவித்தார்.

வருடாந்த மாநாட்டை ஹெட்டிபொலவில் ஏற்பாடு செய்வதற்கு ஷான் விஜயலால் டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தயாசிறி, அந்த குழு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இரண்டு தடவைகள் கூடி கலந்துரையாடியதாக தெரிவித்தார்.

ஆண்டு விழாவை ஹெட்டிபொலவில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு, அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்ட பின்னரும், எவ்வித அறிவிப்பும் இன்றி இடம் மாற்றப்பட்டமை தமக்கு ஆச்சரியமளிப்பதாக அவர் கூறினார். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சி அமைச்சர்களின் விருப்பத்திற்கேற்ப இது இடம் பெற்றதாகத் தெரிவித்த அவர், கட்சி எதிர்க்கட்சியில் உள்ளதா அல்லது அரசாங்கத்தில் உள்ளதா என்பதை அரசாங்கங்கத்தில் உள்ளவர்கள் முதலில் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி கொள்கையற்ற கட்சியாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

கொழும்பில் நடைபெறும் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதா இல்லையா என்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

# உள்ளூராட்சிச் சபைகளில் இனி 25 வீத இளைஞர் பிரதிநிதித்துவம்

## சட்டமூலம் விரைவில் முன்வைப்பு

கொழும்பு, ஓக. 20

உள்ளூராட்சி மன்றங்களில் 25 வீத இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த தெரிவித்தார்.

இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வந்த ஆனால் கடந்த காலத்தில் இழந்த அந்த வாய்ப்பை மீண்டும் இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும் எனவும் அதற்காக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் பெறப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தைப் பற்றி நாங்கள் தொடர்ந்து பேசிவருகிறோம். நம் நாட்டில் பல கலவரங்கள் நடந்துள்ளன. 1971 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளைப் போலவே, கடந்த காலத்திலும் ஒரு இளைஞர் எழுச்சியைக் கண்டோம்.

ஆனால், 1989ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் நமது நாட்டு இளைஞர்கள் அரசியலுக்கு வருவதற்கான வாய்ப்பு கிடைத்ததோடு அதற்குத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இளைஞர் அதிருப்தி ஆணைக் குழுவினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 25 வீத இளைஞர்களின் வேட்புமனுக்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் உரிமை வழங்குவதற்கான உள்ளூராட்சிச் சட்டத் திருத்தத்தின்போது இளைஞர்களுக்கான வாய்ப்பு பறிபோனது.

இதனால் 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இளைஞர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன்படி 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வயதானவர்களே அதிகமாக போட்டியிட்டார்கள்.

பாராளுமன்றத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் பற்றி நாம் பேசினாலும், அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதை காண முடியவில்லை. ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் பிரதிநிதித்துவம் என்பது பல தசாப்தங்களாக நாம் காணக்கூடிய ஒன்று. அதன்படி, அரசியல் குடும்பப் பின்னணி இல்லாத இளைஞர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர்களாக பதவி வகித்த சந்தர்ப்பங்களை நாம் பார்த்திருக்கிறோம்.

இளைஞர்களுக்கு 25 சதவீதமான வேட்புமனுக்களை தாக்கல் செய்யும் உரிமையை இளைஞர்களுக்கு வழங்கும் வகையில் உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் திருத்தம் செய்யப்படுவதோடு அவர்களுக்குரிய உரிமையை மீளப் பெற்றுக் கொடுப்பதற்காகவே இந்தப் பிரேரணை முன்வைக்கப்படுகிறது.

தனிநபர் பிரேரணையாக இந்த முன்மொழிவை நான் சமர்ப்பித்தேன். இந்த பிரேரணை கொண்டு வரப்பட்டு நீண்ட காலம் கடந்ததுடன், இந்த விடயங்கள் பாராளுமன்ற அரசியலமைப்பு தெரிவுக் குழுவிலும் அமைச்சரவையிலும் தொடர்ச்சியாக ஆராயப்பட்டது. சில நேரங்களில் தனிநபர் பிரேரணை சட்டமாக மாற மிகவும் கடினமானது என்பதோடு நீண்ட காலம் எடுக்கும்.

இளைஞர் பிரதிநிதித்துவச் சட்டம் , அமைச்சரவையில் இரண்டு முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இளைஞர் தினத்தையொட்டி, அடுத்த பாராளுமன்ற அமர்வில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரிப்பதற்கான சட்டமூலத்தை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
20.08.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கச்சதீவு மீட்பு விவகாரம்

இலங்கை அரசிடமிருந்து கச்சதீவு மீட்கப்படுமென்று, தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கின்றார். சில தினங்களுக்கு முன்னர், கச்சதீவை காங்கிரஸ் அரசாங்கமே, இலங்கைக்கு வழங்கியதென்று, பிரதமர் மோடி, நாடாளுமன்றத் தில் தெரிவித்திருந்தார். அதேவேளை, தமிழ் நாட்டு பாரதிய ஜனதா கட்சியினர், கச்சதீவை மீட்கப் போவதாகவும், கச்சதீவு பறிபோன மைக்கு, அப்போது ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கமே காரணமென்றும், பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில், கச்சதீவு விவகாரம் தமிழ் நாட்டு அரசியலில் சூடுபிடித்திருக்கின்றது.

285 ஏக்கர் பரப்பளவை கொண்டிருக்கும் கச்சதீவு, 1974ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை கடல்பாதுகாப்பு உடன்பாட்டின் அடிப்படையில், அப்போதைய இந்திராகாந்தி அர சாங்கத்தினால், இலங்கைக்கு வழங்கப்பட்டது. தமிழ் நாட்டு மீன வர்கள், இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் விவகாரம் இன்று வரையில் தீர்க்கப்படாத பிரச்னையாக தொடர்கின்றது. இந்த பின் புலத்தில், கச்சதீவு விவகாரம், தமிழ் நாட்டு அரசியலில் அவ்வப்போது பேசு பொருளாவதும், பின்னர் அடங்கிப் போவதாகவும் இருக்கின் றது. இந்த நிலையில், தற்போது, பாரதிய ஜனதா கட்சியினர், திரா விட முன்னேற்ற கழக ஆட்சிக்கு எதிரான பிரசாரத்திற்கு கச்சதீவு விவகாரத்தை, பெரியளவில் பயன்படுத்திவருகின்றனர். அதே வேளை, கச்சதீவை மீட்க வேண்டுமென்று, பாரதிய ஜனதா கட்சி யின் தமிழ் நாட்டு தலைவர், அண்ணாமலை தொடர்ந்தும் மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துவருகின்றார்.

இவ்வாறானதொரு சூழலில், கச்சதீவு விவகாரம் மத்தியிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. கச்சதீவு பாரத மாதா வின் அங்கம் இல்லையா - என்று மோடி தனதுரையில் கேள்வி யெழுப்பியிருந்தார். இதன் பொருள் என்ன ? தமிழ் நாட்டு மீனவர் கள் எதிர்கொண்டுவரும் பிரச்னையை தீர்ப்பதற்கு கச்சதீவை மீள வும் இந்தியா திரும்பப் பெற வேண்டுமென்னும் கோரிக்கையை, தமிழ் நாட்டு அரசாங்கங்கள் தொடர்ச்சியாக முன்வைத்து வந்தி ருக்கின்றன.

இது சாத்தியமா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால், இவ் வாறான அழுத்தம் இந்தியளவில் ஏற்படுவதை ஒரு வகையில் உள்நாட்டு அரசியல் விவகாரமாக நோக்க முடியுமென்றாலும் கூட, பிறிதொரு புறம், சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித் திருக்கும் சூழலில், சீன கடற்படை நடமாட்டம் முன்னர் எப்போது மில்லாதளவிற்கு அதிகரித்திருக்கும் சூழலில், இந்தியாவின் தேசிய பதுகாப்பு கரிசனைகள் அதிகரித்துவருகின்றன. சீனக் கடற்படை நடமாட்டத்தை கண்காணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கின்றது. இந்திய எச்சரிக்கைகளுக்கு மத்தியிலும், சீனா வின் யுத்த மற்றும் கடற்படை கப்பல்கள் இலங்கையின் துறை முகங்களில் தரித்து நிற்கின்றன.

இந்த நிலையில் கச்சதீவை மீட்க வேண்டுமென்னும் கோரிக்கை எதிர்காலத்தில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விவகாரமாகவும் மாற வாய்ப்புண்டு. குறிப்பாக, பாக்கு நீரிணையை ஊடறுத்து பால மொன்றை அமைக்கும் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க முன் மொழிந்திருக்கின்றார். அது நடந்தால் பிரச்னையில்லை - ஒரு வேளை அதனை முன்னெடுப்பதில் இழுபறிகள், தடைகள் ஏற்படு கின்ற போது, கச்சதீவை மீட்க வேண்டுமென்னும் கோரிக்கை பிறி தொரு பரிமாணத்தை எடுக்கவும் வாய்ப்புண்டு.

இந்த பின்புலத்தில் நோக்கும் போது, எதிர்காலத்தில் கச்சதீவு இந்திய - இலங்கை இருதரப்பு உறவுகளில் முக்கிய இடத்தை பிடிக்கக் கூடும். இலங்கை அதன் வாக்குறுதிகளை மீறுகின்ற போது, கச்சதீவு விவகாரம், இந்திய அரசிற்கான நெருக்கடியாகவும் மாறலாம்.

# ஐ. தே. கவின் மாநாடு ரணில் தலைமையில்!

கொழும்பு, ஒக. 20

ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடத்த கட்சியின் செயல்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் ஐக்கிய தேசிய கட்சிக்குள் அனைவரையும் இணைத்துக்கொள்ளும் வகையில் கட்சியின் யாப்பில் திருத்தம் மேற்கொள்ள இருக்கிறோம் என்று அந்தக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயல்குழு கட்சியின் தலைமையமான சிறிகொத்தவில் நடைபெற்றது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சியின் கட்சி சம்மேளனத்தை நடத்துவதற்கான கட்சியின் செயல்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ளவும் சம்மேளனத்தின்போது கட்சி யாப்பில் மேற்கொள்ள இருக்கும் திருத்தங்கள் தொடர்பில் செயற்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தவும் கட்சியின் செயல்குழு 17ஆம் திகதி மாலை கூடியது.

இதன் பிரகாரம் கட்சியின் 56ஆவது வருடாந்த மாநாடு செப்ரெம்பர் 10ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு லேக்ஹவுஸூக்கு எதிரே அமைந்திருக்கும் கேட்போர் கூடத்தில் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கட்சி யாப்பு திருத்தத்தின் போது, கட்சியை விட்டு சென்றவர்கள் மீண்டும் கட்சிக்குள் வந்து செயற்பட முடியுமான வகையிலும் தேர்தல் காலத்தில் வேறு கட்சிகளை கூட்டிணைத்துக்கொண்டு போட்டியிட முடியுமான வகையிலும் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

போராட்டத்தின் போது மக்கள் மாற்றத்தை வேண்டி இருந்தார்கள். அந்த மாற்றத்தை புதிய வடிவத்தில், புதிய வேலைத்திட்டத்துடன் முன்னெடுக்கவே ஐக்கிய தேசிய தற்போது முயற்சிக்கிறது. அதற்கான ஆரம்பமே கட்சி மாநாட்டின் மூலம் முன்னெடுக்க இருக்கிறோம் - என்றார். (ஐ)

# "அடுத்த தேர்தலிலும் ரணில் வெல்வார்!"

யாழ்ப்பாணம், ஒக. 20

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லமுடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த நாட்டை தற்போதைய ஜனாதிபதி கட்டியெழுப்பியுள்ளார். இதேபோன்று வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னைகளுக்கும் விரைவில் தீர்வினை பெற்றுக் கொடுப்பார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெறுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியினை பலப்படுத்துவதன் மூலம் வடக்கு மக்கள் மாத்திரமில்லாது, இலங்கையில் உள்ள அனைத்து மக்களின் பிரச்னைகளும் தீர்க்கப்படும் - என்றார். (அ)

# வடக்கு-கிழக்கில் அமைதியற்ற நிலையை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம்!

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 20

தொல்பொருள் திணைக்களம், வனவளத் துறை, இராணுவம் மற்றும் பௌத்த மதகுருமார்களைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அமைதியற்ற சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.


தனது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்க பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இனவாதங்களை தூண்டிவிட்டு பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளனவெனவும் அவர் குறிப்பிட்டார்.

குருந்தூர் மலை விவகாரத்தை கொண்டு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மறைமுகமான செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே சிவசேனையின் மறவன்புலோ சச்சிதானந்தன் உள்ளிட்ட சைவ மத தலைவர்கள் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பௌத்த பிக்குகள் தொடர்ச்சியாக மதக் கட்டளைகளை மீறியபோதிலும், அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால், தமிழர்களின் சைவ நிகழ்வுகளை கட்டுப்படுத்தும் வகையில் உத்தரவுகளை பிறப்பிக்கும் செயற்பாடுகள் நீதித்துறை அதிகாரத்தை இழிவுபடுத்துவதாகவே அமைந்துள்ளதாக அம்பிகா சற்குணநாதன் மேலும் கூறினார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -91

# பாலால் உயர்ந்ததொரு கோடிபதி...

**கணபதி சர்வானந்தா**

ஒரு வியாபாரி எப்படி இருப்பான்? எப்படி இருக்க வேண்டும்? என்று சொல்லுவதற்குப் பல உதாரணங்களுண்டு. ஆரம்பத்தில் பணம் பண்ணுவது மட்டும் அவரது நோக்கமாக இருக்கும். காலப் போக்கில் அவர் பார்வை சமூகத்தை நோக்கித் திரும்பும். இது வரலாறு. அவ்வாறு சமூக அக்கறையோடு, சமூகப் பொறுப்போடு பலர் பலவிதமான பணிகளைச் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள் என்பதற்கு மில்க்வைற் அதிபர் ஒரு சாட்சியாகவுள்ளார். அவ்வாறு குறிப்பிடக் கூடிய பெருமைக்குரியவர் மில்க்வைற் அதிபர் அமரர் க. கனகராசா. அவர் வாழ்ந்த போது பனை வளம் பற்றியே அதிகம் சிந்தித்தார். அவர் கண்ட கனவின் முக்கியத்துவம் பற்றி அப்போதுள்ளவர்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால் அவர் சிந்தனையைப் பனைவள மேம்பாட்டுச் சபை இன்று கொண்டாடு கிறது.

இன்று முகநூலிலுள்ளதொரு விடயத்தைப் பார்த்தபோது அதனைப் பகிரவேண்டும் என்று எண்ணினேன்.அது ஒரு இந்தியத் தொழில் அதிபர் பற்றியது. உழைப்பால் உச்சத்தைத் தொட்டவர் எனப் பல பெருமைக்குரியவர்.

“எமக்கு இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. இது போன்றே பலர் முதலாளிகளாக வந்திருக்கிறார்கள்” என்று நீங்கள் சொல்வது கேட்கிறது. இருந்தும் அவர்கள் பாதை, அனுபவம், சந்தித்த இடர்கள், எதிர்நோக்கிய சவால்கள் என மனிதருக்கு மனிதர் வேறுபடுவதைப் பார்த்தபோது தான் நாம் இது போன்ற நல்ல விடயங்களை, ஒருவனை உச்சத்துக்குக் கொண்டு செல்லக்கூடிய ஒருவரது அனுபவங்களை என்று எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் மக்களை மேம்படுத்தலாம் என்று தீர்மானித்ததன் விளைவுதான் இந்த எழுத்துகள். யுகம் ரீவி தமிழ் என்ற முகநூலில் கண்டு அனுபவித்தது.

1971 ஆம் ஆண்டுக்கு முன்னராக தெருத்தெருவாகச் சென்று வெறும் பத்துப் பைசா பெறுமதியான ஐஸ் விற்ற ஒரு அடிமட்டத் தொழிலாளியாக இருந்தவர் ஜி.கே.சந்திரமோகன். அந்த நாட்களில் அவருக்குள் உதித்த கனவின் வெளிப்பாடே பின்னாளில் ஒரு வியாபார சாம்ராஜ்யத்தை உருவாக்கக் காரணமாயிருந்தது என்று தான் சொல்ல வேண்டும். ரூபா. 5000 கோடிக்கு அதிபதி என்று சொல்கிறார்கள். அது ஒரு இரவில் நடைபெற்ற விடயமல்ல.

ஆனால் ஜி.கே.சந்திரமோகன் பற்றிச் சொல்லப்படாததொரு உண்மை இருக்கிறது.அது தான் அவர் பருவத்தே பயிர் செய்த அனுபவ அறிவு. அவர் வெற்றி என்ற விடயம் சில நாட்களில் கைகூடிய சாதனை எனச் சொல்லமுடியாது. அதனை நிகழ்த்த அவர் பல நாட்கள், பல வருடங்கள் என ஒரு நீண்டகாலக் காத்திருப்பில் இருந்திருக்க வேண்டும். காலக் கனிவுக்காக அவர் காத்திருந்தார். காற்றுள்ளபோதே அவர் தூற்றிக் கொண்டார். காலம் அறிந்து அவர் எடுத்த தீர்மானம் என்ற விடயம்தான் இதில் முதன்மைப்படுத்த வேண்டும். பொதுவாக தன்னிடம் உள்ள சொத்தெல்லாவற்றையும் விற்று இப்படிப்பட்டதொரு முயற்சியைத் ஒருவர் தொடங்கு முன்னர் அவர் பலவிடயங்கள் பற்றிச் சிந்தித்தாக வேண்டும். முயற்சி திருவினையாக்கினால் சரி. இல்வாவிடில் இருண்டதொரு எதிர்காலமே பரிசாகக் கிடைக்கலாம். இந்த இடத்தில் வெறுமனே றொபேட் புறூஸ் கதையைச் சொல்லி வேண்டும் என்றால் அடுத்த முயற்சிக்குத் தயாராகலாம். ஆனால் அதற்குத் தான் தகுதியுள்ளவனா? என்பதையும் ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும். பௌதீக பலத்தை விட வலிமையுள்ளதென நான் கண்டது ஆன்மபலத்தையே. பௌதீகவழியில் சக்தி இல்லாவிட்டாலும் ஆன்ம பலம் இருந்தால் போதும் விண்ணையும் வளைத்துவிடலாம்.

இருந்ததை எல்லாம் விற்று தொழிலை ஆரம்பித்தவர்கள் வரலாறு எம்மிடையே பல உண்டு.அதில் வெற்றிபெற்றவர்கள் பாராட்டப்பட்டனர். தோல்வியடைந்தவர்கள் தற்கொலைவரை சென்றிருக்கின்றனர். இது போன்ற முயற்சி தன்னையும் தனது குடும்பத்தின் எதிர்காலத்தையும் வைத்துப் பகடையாடுவதற்கு ஒத்தது என்றும் சொல்லலாம்.

எனவேதான் மேற்குறிப்பிட்ட முயற்சியாளர் ஜி.கே.சந்திரமோகன் அவர்களைப் பாராட்டுகிறார்கள். முன்னுதாரணமாகக் கொள்கின்றனர். அவர் சமூகத்தில் பேசப்படுகிறார். அவரால் பலர் வாழ்கின்றனர். ஒரு தனிமனித முயற்சிக்கூடாகப் பலர் வாழ்வாதாரத்தைப் பெறுவதென்பது போற்றத்தக்கதொரு விடயம். இயல்பிலேயே ஜி.கே.சந்திரமோகன் அவர்களுக்கு இருந்த முகாமைத்துவப் பண்பும் அவருக்கு உதவி இருக்கிறது. பொருள் முகாமைத்துவத்துடன் மனித முகாமைத்துவம், மனிதவள மேம்பாடு போன்ற விடயங்கள் அவருக்குள் இருந்திருக்கிறது. வெறுமனே ஐஸ், பால் தயாரிப்பு பற்றிய அறிவு மட்டும் அவருக்கு உதவியதென்று சொல்ல முடியாது.

தெருத்தெருவாகச் சென்று ஐஸ் தயாரிப்புகளை விற்றபோது அவர் கற்ற அறிவுதான் அவரை இது வரை உயர்த்தியிருக்கிறது. அவர் கவனம் வியாபாரத்தில் மட்டும் அல்ல அது தொடர்பாக இருக்க வேண்டிய முகாமைத்துவ நடவடிக்கை, வியாபாரப் பண்பு, ஒரு சிறந்த வியாபாரிக்கிருக்க வேண்டிய ஆளுமை, இருக்க வேண்டிய சமூகத்துடனான தொடர்பு எனப் பல விடயங்களை அவர் கற்றுக் கொண்டார். அந்த உண்மையை, அவர் ஒரு முதலாளியானபோது மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கூடாகக் கணக்கூடியதாக இருந்தது.

முயற்சியாளர் ஜி.கே.சந்திரமோகன் அவர்கள் பற்றிய அந்த முகநூல் பதிவு உங்களுக்காக –

1971ஆம் ஆண்டு முன்புவரை பத்து பைசாவிற்கு வீதியில் ஐஸ் விற்றவர் ஜிகே சந்திரமோகன். சொத்தை விற்றுக் கடன் வாங்கி ரூபா 13ஆயிரத்தை திரட்டி 1971ஆம் ஆண்டு ஜிகே அண்ட் கோ நிறுவனத்தை உருவாக்கினார். அதன் ஊடாக அருண் ஐஸ்கிறீம் என்னும் தயாரிப்பைத் தமிழகத்திற்குக் கொடுத்தார் இன்று தமிழகத்தின் பட்டி, தொட்டி எல்லாம் இவருடைய தயாரிப்பான அருண் ஐஸ்கிறீம் பிரபலமாகிவிட்டது.அருண் ஐஸ்கிறீமைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. ஐஸ்கிறீமுக்குரிய மூலப்பொருள் பால் என அனைவரும் அறிவர். அதனைக் கொள்முதல் செய்த அனுபவத்தில் அந்த பாலையும் அவர் தொழிலாகக் கொண்டார்.

1995ஆம் ஆண்டு “ஆரோக்யா” என்ற பெயரில் பாலையும், பால் தயாரிப்புகளையும் சந்தைகளில் இறக்கினார்.அதுவும் இவருக்கு நல்லதொரு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது. ஆரோக்கியா தயாரிப்பான மோர், தயிர், வெண்ணைய், நெய் என்று பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் சந்தையில் நல்லதொரு வரவேற்பைப் பெற்றன.அதனால் இன்று இவருடைய நிறுவனம் வருடத்திற்கு சுமார் ரூ. 5000 கோடிவரை வருமானம் ஈட்டுகிறதொரு உன்னத நிலையைப் பெற்றிருக்கிறது. – என அந்த முகநூல் பதிவு முற்றுப் பெறுகிறது.

•

# இந்தவார ராசிபலன் 20.08.2023 - 26.08.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 03

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உங்கள் முயற்சிகளில் தடை தாமதங்கள் ஏற்படும். எதிர்பார்க்கும் தனவரவு தள்ளிப் போகலாம். உத்தியோகஸ்தர்கள், எதிர்பார்த்த காரியங்கள் நடைபெற சிறிது காலம் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். சகப் பணியாளர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளுங்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், பணிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். வாடிக்கையாளர்களின் திருப்திக்காக, செய்த வேலையையே மீண்டும் செய்யும்படி ஆகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சிலவற்றில் தடை இருந்தாலும், உங்கள் முயற்சியால் பலவற்றில் வெற்றிபெறுவீர்கள். நல்லவர்கள் சந்திப்பும், அதனால் காரிய வெற்றியும் கிடைக்கும். வரவேண்டிய பணம், கைக்கு வந்துசேரும். உத்தியோகஸ்தர்களுக்கு, அலுவலகத்தில் இருந்து வரவேண்டிய சலுகை கிடைத்து மகிழ்ச்சி ஏற்படும். அவசரமாக புதிய வேலைஒன்றை செய்து முடிக்க வேண்டிய அவசியம் உண்டாகலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், அதிகமான பணிகளையும், நல்ல ஆதாயத்தையும் பெறுவர். கூட்டுத் தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தந்தை வழி உறவுகளால் சிறு மனவருத்தம் ஏற்படும். இருந்தபோதும் உங்கள் முயற்சியால் பிரச்சினை விலகி ஆனந்தம் வந்து சேரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணியில் ஏற்பட்ட சிறு தவறினால் உயரதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். வேலைகளில் கவனமும், நிதானமும் தேவை. சகப் பணியாளர் ஒ ருவரின் வேலையை சேர்த்துச் செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத் தொழிலில் வாடிக்கை யாளரின் திருப்தியை சம்பாதிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை வரலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

செய்தொழில் சிறப்பாக நடைபெற்றாலும், தவிர்க்க முடியாத செலவுகளால் மன சஞ்சலம் உருவாகும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைத்து மகிழ்வடைவீர்கள். உறவுகளின் ஆதரவான பேச்சுகள் மனநிறைவைத் தரும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகத்தில் பணி நெருக்கடியை சந்திக்க நேரிடும். சொந்தத்தொழிலில் கவனமாக இருந்தால் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெறமுடியும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

தள்ளிப்போட்ட காரியத்தை உடனே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். திட்டமிட்ட பயணம் தவிர்க்க இயலாத காரணங்களால் ஒத்திவைக்கும்படி ஆகலாம். வயதானவர்களின் அறிவுரை வாழ்க்கையின் முக்கிய திருப்பத்திற்கு அஸ்திவாரமாக அமையும். உத்தியோகஸ்தர்கள் கடமைகளில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். புதிய பொறுப்புகளால் வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்த்த கடன் தொகை தள்ளிப்போகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சிறப்பான பலன்களைப் பெற்று முன்னேற்றமடைவீர்கள். வரவேண்டிய தன வரவுகள் தாமதமில்லாமல் வந்து சேரும். இடமாற்ற முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு, புதிய பொறுப்புகள் கிடைக்கும். செய்யும் வேலையில் பாராட்டும் ஆதாயமும் ஏற்படலாம். சொந்தத்தொழிலில் எதிர்பார்க்கும் ஆதாயம் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகத்தால் தொழிலில் வளர்ச்சி ஏற்படும். கூட்டுத்தொழில் வியாபாரம் நன்கு நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எதிலும் கவனம் தேவை. செலவுகள் எதிர்பார்ப்பையும் மீறி இருக்கும். சகோதர வழியில் சிறுசிறு சலசலப்புகள் தோன்றி மறையும். உத்தியோகஸ்தர்களில் சிலர் விடுமுறையில் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். சிலருக்கு பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைத்து, வேறு இடத்திற்குச் செல்லும் வாய்ப்பு உண்டு. சொந்தத்தொழில் செய்பவர் அதிக வேலைகளையும், அதிக வருமானத்தையும் பெறக்கூடும். கூட்டுத்தொழிலில் கவனமுடன் இருந்தால் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்களின் சில வேலைகளை மற்றவர்களிடம் கொடுத்து முடித்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமான ஒரு வேலையை வெற்றி கரமாகச் செய்து முடித்து உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வருகையும், அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் காணப்படும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் சுமாரான லாபம் அடைவர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பண விஷயங்களில் கவனம் தேவை. எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளிப்போக நேரிடும். உத்தியோகத்தில் சுமுகமான போக்கு காணப்படும். மலைபோல் குவிந்த வேலைகளை தீவிர முயற்சியோடு செய்து முடித்து பாராட்டுப் பெறுவீர்கள். அலுவலகத்தில் கேட்டிருந்த கடனுதவிகள் வந்து, பாதியில் விட்டிருந்த வேலையைத் தொடரலாம். சொந்தத் தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில லாபம் கூடும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. மேலும் பல காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும், சிலவற்றிலேயே நீங்கள் எதிர்பார்க்கும் நலன்களை அடைய முடியும். தளர்வான காரியங்களில் வெற்றி பெற தகுந்த நபர்களின் உதவி தேவைப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகள் விருப்பப்படி நிறுத்தி வைத்த வேலையை உடனடியாக செய்வீர்கள். சொந்தத் தொழில் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் குறையாது.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

அக்கம் பக்கத்தினர் குடும்ப விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. அதிகச் செலவாகும் என்று நினைத்த காரியம், குறைந்த செலவிலேயே முடிவுக்கு வரலாம். மனை, வீடு வாங்குவதற்குப் போட்ட திட்டம் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள், சக ஊழியரின் பணியையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு, பணிகள் சுறுசுறுப்பாக நடைபெறும். கூட்டாளிகளுடன் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்து விவாதித்து முடிவெடுப்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்க்கும் பண வரவுகளில் தாமதங்கள் ஏற்படலாம். உறவினர்களிடமும், நண்பர்களிடமும் சுமுகமாக நடந்துகொள்ளுங்கள். வெளியூரிலிருந்து எதிர்பார்த்த தகவல் வந்துசேரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் குறைகளை சரி செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும், வழக்கமான லாபம் குறையாது. குடும்பத்தில் பழைய கடன் தொல்லைகளால் சிறிது தளர்ச்சி அடையலாம்.

# அரங்கு நிறைக்கும் 'ஜெய்லர்' திரைப்படம்



சென்னை மடல்
-பகவான் சிங்-

ஒரு லகுவான தலைப்புடனும் மகிழ்ச்சியான உரையாடலுடன் இன்றைய ஞாயிறைத் துவக்குவோமா? நீங்கள் ரஜினிகாந்தின் 'ஜெய்லர்' பார்த்துவிட்டீர்களா? இன்று காலை யாழ்ப்பாண நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஒகஸ்ட் 10 அன்று படம் வெளியானதிலிருந்து இலங்கையின் திரையரங்குகளில் இந்தப் படம் சிறப்பாக ஓடிக்கொண்டிருப்பதாக அவர் கூறினார். தானும் குடும்பத்துடன் சென்று பார்த்ததாகவும் அனைவருக்கும் பிடித்திருந்ததாகவும் தெரிவித்தார். சென்னையிலும் 'ஜெய்லர்' அரங்கம் நிறைந்த காட்சிகளுடன் ஓடிக்கொண்டிருக்கிறது; எனது மகனும் அவர் குடும்பத்தினரும் கூடப் பார்த்துவிட்டனர் அவர்களுக்கும் பிடித்திருந்தது. நானும் ரிக்கெற்றை முன்பதிவு செய்ய வேண்டும் என் பத்திரிகையாள நண்பர் சேகருடன் சென்று பார்க்க எண்ணிக் கொண்டிருக்கிறேன்.




இந்திய திரைத் துறையின் மிகவும் சாமர்த்தியமான திறமை கொண்டவர்களில் ஒருவரான கலாநிதி மாறனின் சன் பிக்சர்ஸ் வெளியிட்ட அறிக்கையில், முதல் வாரத்திலேயே 'ஜெய்லர்' 375.4 கோடி ரூபாய் வசூல் செய்துள்ளதாகக் கூறியுள்ளது. தமிழ் சினிமாவில் முதல் வாரத்தில் இந்த அளவு வசூல் என்பது சந்தேகத்துக் கிடமின்றி ஒரு சாதனைதான். இன்ஸ்டாகிராமில் சன் நிறுவனம் இத்திரைப்படத்தின் அமோக வெற்றி குறித்த தனது ஆங்கிலப்பதிவில், "அலப்பறை கௌப்பிட்டோம்" என்று பெருமையுடன் பறைசாற்றியது. வெளிநாடுகளிலும் 'ஜெய்லர்' வெற்றிகரமாக அரங்கம் நிறைந்த காட்சிகளுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. ரஜினிகாந்துக்கு இன்னும் ரசிகர் கூட்டம் இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

இந்த மக்கள் செல்வாக்கு, சினிமாவில் ஊறிய தமிழக அரசியலில்கூட, ஒரு காலத்தில் காலடி வைக்க நினைக்கும் அளவுக்கு அவரை இட்டுச் சென்றது. அப்படி ஓர் அரசியல் பிரவேசத்துக்கு அவர் தயாராகிவிட்டாரெனச் சில ஆண்டுகளுக்கு முன் நம்பப்பட்டபோதும், மோசமான உடல் நிலை காரணமாக அது நடக்காமல் போனது. ஒருவேளை, இந்த உச்சத் திரை நட்சத்திரம், போர்க் களத்தில் பின்வாங்காமல் குதிக்க முன்வந்திருந்தால் ஜெயலலிதாவை எதிர்த்துத் திரையுலகிலிருந்து மற்றொரு முதலமைச்சர் வேட்பாளராக உருவெடுத்திருக்கலாம். எனது நல்ல நண்பரும் 'துக்ளக்' முன்னாள் ஆசிரியருமான காலம் சென்ற சோ அந்த நாட்களில் பல



முறை ரஜினியைச் சந்தித்து, அரசியல் களத்தில் இறங்குமாறு அறிவுறுத்தி வந்தது எனக்கு நினைவிருக்கிறது. அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. திரையில் தோன்றும் அட்டைக் கத்தியை விடுத்து, ஆள் முழுங்கித் திமிங்கலங்கள் நிறைந்த கொந்தளிப்பான தமிழக அரசியல் கடலில் ஜெயலலிதா போல, எஃகு வாளுடன் இறங்கும் துணிவு ரஜினிக்கு இல்லை என்ற ஐயமும் பலரால் எழுப்பப்பட்டது.

ஒரு விநோதமான விஷயம். இப்போது ரஜினிகாந்த் அரசியல் பிரவேசம் செய்வாரா என்பது குறித்து விவாதிப்பது தேவையற்றது என்றாலும் இந்த நடிகர் இன்னும் தமிழ் சினிமாவில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக சுப்பர் ஸ்டாராகவே இருக்கிறார் என்பதை மறுக்க முடியாது. தமிழ்த் தேசியவாதி சீமான், பாட்டாளி மக்கள் கட்சியின் மருத்துவர் ஐயா ராமதாஸ் போன்றவர்களின் எதிர்ப்பு, பெங்களூரை சேர்ந்த மஹாராஷ்டிரரான ஷிவாஜி ராவ் கெய்க்வார்ட் தமிழ் மக்களின் செல்வாக்கைப் பெறுவதைத் தடுக்கமுடியவில்லை. ஒரு தமிழன் தான் தமிழர்களை ஆள வேண்டும் என்று சீமானும் திரையில் புகைபிடித்தும் மது அருந்தியும் நடித்து வந்த ரஜினிகாந்த் போன்ற திரை நட்சத்திரங்கள் தமிழ் இளைஞர்களை தவறான பாதையில் வழிநடத்தக்கூடும் என்று ராமதாஸூம் கூறி வந்தனர். இலட்சக் கணக்கான திரை

## ஜெயலலிதாவுக்கு ரஜினிகாந் போட்டியாகியிருப்பார்?

ரசிகர்களால் 'புரட்சித் தலைவர்' என்று கொண்டாடப்பட்ட எம். ஜி. ஆருக்கு, அதே ரசிகர்கள் அரசியல் அடியொற்றிகளாக மாறினர்.

அரசியல் எதிரிகள் அவரின் மக்கள் செல்வாக்கைக் குறைக்க, அவரை மருதூர் கோபாலன் ராமச்சந்திரன் ஒரு மலையாளி என்று பிரசாரம் செய்தபோதிலும், 1977 முதல் உயிரிழந்த 1987 வரை அவர் தமிழகத்தை ஆள்வதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

அவரின் திரைப்பட நாயகியாக இருந்த ஜெயலலிதா அரசியலில் வாரிசாக உருவெடுத்து அ. தி. மு. க. தலைமைப் பொறுப் பேற்றபோது இதேபோன்ற ஒரு சாதனை யைச் செய்து, 1991இல் தொடங்கி ஆறு முறை ஆட்சியமைத்து, 14 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டார். 2016 டிசெம்பர் 5 அன்று மரணமடைந்த போது அவர் முதல மைச்சராகத்தான் இருந்தார். மைசூரைச் சேர்ந்த பிராமண குடும்பத்தில் பிறந்த இவர், திராவிட சமூக - அரசி யல் கலாசாரத்துக்கு அந்நியமானவர் என்று அரசியல் எதிரிகளால் அடையாளப்படுத்தப் பட்டாலும் அதை யெல்லாம் தமிழக மக்கள் பொருட்படுத்தவில்லை. தன் மேல் எழுந்த இமாலய ஊழல் குற்றச்சாட்டுகளால்

## சூழ்ச்சி அரசியல் தலைவர்களால் மக்கள் ஏமாற்றப்பட்டுவிடுவார்களா?

தான் இரண்டு முறை அம்மையார் தோல்விய டைந்தார்.

இந்த நீண்ட, சிக்கலான விவரணத்தின் மூலம், நான் கூற வருவது என்ன? மக்கள் - சாமானியன் - சூழ்ச்சி நிறைந்த அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட முடியாத அளவுக்கு புத்திக்கூர்மையும் அரசியல் அறிவும் பெற்றவர்கள் என்பதுதானே? ஈழநாடு கட்டுரைகளின் மூலமாக, மக்களின் மனக் கதவுகளைத் தட்டி, கடந்த காலத் தவறுகள் குறித்தும் அவற்றுக்கு யார் பொறுப்பு என்பது குறித்தும் ஆழ்ந்து சிந்தித்து, தங்களுக்கு மட்டுமல்லாமல் வருங்காலச் சந்ததியினருக்கும் நலன் பயக்கும் தீர்வுகளை எட்டும் வழிகளை ஆராயுமாறும் தொடர்ந்து நான் கோரி வருவதற்கு அதுதான் காரணம்.

மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்காக மத்திய அரசின் அமைப்பு நடத்தி வரும் தகுதித் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு கோரி தி. மு. க., அ. தி. மு. க. இரு ஆட்சிகளிலும் தொடர் போராட்டங்கள் நீண்ட காலமாக நடந்து வருவதை நாம் பார்க்கிறோம். இந்த நீட் தேர்வில் தகுதி பெறாததால் சென்னையைச் சேர்ந்த ஒரு 19 வயது மாணவன் தற்கொலை செய்து கொண்ட அவலத்தையும் அதைத் தொடர்ந்து மன முடைந்த அவன் தந்தையும் தற்கொலை செய்து கொண்ட துயரச் செய்தியையும்தான் ஒகஸ்ட் 15 சுதந்தர தினச் செய்தித் தாள்கள் முதல் பக்கத்தில் தாங்கி வந்தன. இரண்டு மாதங்களுக்கு முன் வெளியான இந்தத் தேர்வு முடிவுகளை அடுத்து நடந்த இந்த இரு தற்கொலைகளையும் சேர்த்தால் தமிழகத்தின் நீட் தற்கொலை எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

தமிழக மாணவர்களுக்கு நீட் விலக்கு பெற்றுத் தரும் தனது முயற்சியின் அடுத்த கட்டமாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்கு நீட் விலக்குத் தீர்மானத்துக்கு ஒப்புதல் கோரிக் கடிதம் எழுதியுள்ளார். மாநில சட்டமன்றத்தில் நீட் விலக்கு மசோதா ஒருமுறைக்கு மேல் நிறைவேற்றப் பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு நீண்ட காலதாமதத்துக்கப் பிறகு அதை ஆளுநர் ரவி குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ளார். நீட் அறிமுகத்துக்கு முன்பிருந்ததுபோல, பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படை யில் மருத்துவக் கல்லூரிச் சேர்க்கை நடைபெறவேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.

ஸ்டாலின் குடியரசுத் தலைவர் முர்முவுக்கு எழுதிய கடிதத்தில் நீட் விலக்கு மசோதா வுக்கு ஒப்புதல் அளித் துப் பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப் படையில் மாணவர் சேர்க்கை நடந்திருந்தால் இது போன்ற தற்கொலை நிகழ்வுகளை நிச்சயம் தவிர்த்திருக்க




முடியும் என்று கூறியுள்ளார். சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு மசோதா தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த கருத்தின் பிரதிபலிப்பு என்றும் அதனைச் செயல் படுத்துவதில் ஏற்படும் ஒவ்வொரு நாள் தாமதமும் தகுதியான மாணவர்களுக்கு மருத்துவச் சேர்க்கை கிடைப்பதில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு, சமுதாயத்தில் விலைமதிப்பற்ற மனித உயிரிழப்புகள் ஏற்படுவதற்கும் காரணமாக அமைகிறது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த விவகாரத்தில் இந்திய குடியரசுத் தலைவர்

உடனடியாகத் தலையிட்டு, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட நீட் தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்களுடன் நேரடித்தொடர்புள்ள கல்வி போன்ற அனைத்துத் துறைகளும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, 'மாநிலப் பட்டியலில்' வர வேண்டும் என்று ஸ்டாலின் தனது சுதந்தர தின உரையில் வலியுறுத்தினார். அரசமைப்புச் சட்டத்தில் மூன்று பட்டியல்கள் இருக்கின்றன - முற்றிலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வரும் துறைகள் மத்தியப்பட்டியலிலும் (பாதுகாப்பு, அயலுறவு, ரயில்வே மற்றும் செலாவணி போன்றவை), மாநில அரசின் கட்டுப்பாட்டில் வரும் விஷயங்கள் மாநிலப் பட்டியலிலும் மத்திய, மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படும் துறைகள் பொதுப்பட்டியலிலும் வருகின்றன. கல்வி என்பது பொதுப்பட்டியலில் வருகிறது. சுதந்தரத்திற்குப் பிறகு, 1950இல் பாராளு மன்றத்தால் புதிய அரசமைப்புச் சட்டம் பின்பற்றப் படத் தொடங்கியபோது, கல்வி மாநிலப் பட்டியலில்தான் இருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப்பரவலாக்கத்துக்கு எதிரான சக்திகளுக்கு வலுச்சேர்க்கும் கம்யூனிஸ்டுகளின் கருத்துக்கள்





வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து பேசத்தொடங்கிய நாள் முதல் அந்த திருத்தம், அதிகாரப்பரவலாக்கம் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பில் விவாதங்கள் தீவிரமடைந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். துரதிர்ஷ்டவசமாக அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான சக்திகளின் குரலே ஓங்கி ஒலிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு புறப்பட்ட ஜனாதிபதி மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் அதை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் யோசனையை முன்வைத்து அந்த திருத்தத்தின் அதிகாரங்களை மேலும் குறைப்பதற்கு அல்லது அதை முற்றாக இல்லாமல் செய்வதற்கு வழிவகுக்கக்கூடிய செயன்முறையொன்றை அறிந்தோ அறியாமலோ முடுக்கிவிட்டிருக்கிறார் என்று ஏற்கெனவே இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

முன்னர் 13 வது திருத்தத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்த அரசியல் மற்றும் சிவில் சமூக சக்திகள் கூட அதன் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவாக உறுதியாக குரல் கொடுக்க தயங்குவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குணசேகர அண்மையில் டெயிலி நியூஸ் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் வெளியிட்ட கருத்துக்கள் இன்று இருக்கக்கூடிய கம்யூனிஸ்ட் தலைவர்களில் மிகவும் மூத்தவரான அவரும் கூட உருப்படியான அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான சக்திகளை வலுப்படுத்தக்கூடிய நிலைப்பாட்டை எடுத்திருக்கிறாரோ என்ற ஒரு சந்தேகத்தைக் கிளப்புகிறது.

சமஷ்டி முறைக்கு மாற்றாக மாகாண சபை முறையை உகந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை நேர்காணலில் வெளிப்படுத்திய அவர் பொலிஸ் அதிகாரம் குறித்து கேட்கப்பட்டபோது அந்த அதிகாரத்தை மாகாணங்களுக்கு கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்று பதிலளித்தார்.

'எந்தவொரு மாகாணசபைக்கும் பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அவ்வாறு வழங்கினால் மாகாணசபைகளில் உள்ள அமைச்சர்கள் பயன்படுத்துவார்கள். இந்த அமைச்சர்கள் எல்லோரும் நடந்துகொள்கின்ற முறையை பார்க்கும்போது அவர்களுக்கு பொலிஸ் அதிகாரமும் கிடைத்துவிட்டால் என்ன செய்வார்கள் என்று நினைத்துப்பாருங்கள். அமைதியும் ஒழுங்கும் பேணப்படவேண்டும். ஆனால் அதற்காக இந்த சிறிய நாட்டில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் தேவையில்லை. இந்தியாவில் மாநிலங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்காக இலங்கையில் அவ்வாறு செய்ய முடியாது" என்று குணசேகர கூறியிருக்கிறார்.

13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் இருக்கிறது. ஆனால், மாகாண சபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இதுவரையில் ஆறு தடவைகள் தேர்தல்கள் நடத்தப்பட்டு மாகாண சபைகள் இயங்கியபோதிலும், பொலிஸ் அதிகாரம் மாத்திரமல்ல பல்வேறு முக்கிய அதிகாரங்களும் அவற்றுக்கு வழங்கப்படவில்லை. இது எல்லோருக்கும் தெரியும். பொலிஸ் அதிகாரத்தைக் கேட்டு வடக்கு, கிழக்கு உட்பட எந்தவொரு மாகாண முதலமைச்சரும் பிரச்சினை கிளப்பியது கிடையாது.

ஆனால், பொலிஸ் அதிகாரம் இல்லாமல் 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஜனாதிபதி விக்கிரமசிங்க கடந்த மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பில் யோசனையை முன்வைப்பதற்கு முன்னதாக குணசேகர எப்போதாவது இந்த பொலிஸ் அதிகாரம் குறித்து கருத்து வெளியிட்டதாக நாம் அறியவில்லை.

துஷ்பிரயோகம் செய்யப்படும் என்ற சந்தேகம் இருந்தால் எந்தவொரு அதிகாரத்தையும் ஒருபோதுமே வழங்கமுடியாது. மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் தான் பொதுவில் அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படுகின்றன. அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்படுவதை விரும்பாத சக்திகளே அதிகார துஷ்பிரயோகம் பற்றிய சந்தேகத்தை தங்களுக்கு வசதியான முறையில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் தொடர்பிலும் இதுவே நிலைமை.





**ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற பெயரில் பேரினவாதத்திடம் சரணாகதியடைந்த படுமோசமான வரலாற்றுத் தவறு குறித்து கம்யூனிஸ்ட் கட்சி அதன் 80 வருட நிறைவிலாவது சுயவிமர்சனம் செய்யத்தயாராயில்லை.**

13 வது திருத்தத்துக்கு எதிராக தென்னிலங்கையில் முழுவீச்சில் கிளம்பியிருக்கும் சக்திகள் மாகாணங்களுக்கு காணி அதிகாரம் குறித்தும் பிரச்சினை கிளப்பத்தொடங்கியிருக்கின்றன. அது பெரும் சர்ச்சையாக உருவெடுக்கும் பட்சத்தில் இந்த கம்யூனிஸ்ட் தலைவர் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பாரோ யாரறிவார்?

அதேவேளை சமஷ்டி முறை குறித்து கருத்துக்கூறிய முன்னாள் அரசியலமைப்பு விவகார அமைச்சருமான குணசேகர அந்த முறை வேறு நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கு பொருத்தமாக இருந்தாலும் இலங்கைக்கு பொருத்தமானது இல்லை என்று கூறியிருக்கிறார்.

'எமது நாடு ஒரு சிறிய தீவு என்பதையும் அது சிறிய பொருளாதாரத்தைக் கொண்டது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். புவிசார் அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணிகளுக்காகவும் எமது நாட்டுக்கு சமஷ்டி முறை பொருத்தமானது இல்லை. நாட்டின் தற்போதைய நிலைவரத்தையும் கருத்தில் எடுக்கவேண்டும். அதனால் இந்த காரணிகள் சகலவற்றையும் ஒன்று சேர்த்து நோக்கும்போது இலங்கைக்கு பொருந்தாத சமஷ்டி முறையை அதன் மீது திணிக்கவும் முடியாது. அதன் காரணத்தினால் மாகாணசபை முறையை உகந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம்" என்று கூறி சமஷ்டி முறைக்கு எதிரான தனது நிலைப்பாட்டுக்கு அவர் நியாயம் கற்பித்தார்.

அமெரிக்கா, இந்தியா போன்ற பெரிய நாடுகளுக்கே சமஷ்டி முறை பொருத்தமானது என்று கூறும் குணசேகர இலங்கையை விடவும் சிறிய நாடான சுவிட்சர்லாந்தில் சமஷ்டி முறை நீண்டகாலமாக மிகவும் வெற்றிகரமாக நடைமுறையில் இருந்துவருவதை அறியா தவர் இல்லை.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையில் சிவில்சேவை அதிகாரியாக பணியாற்றிய இங்கிலாந்து நாட்டவரான லெனார்ட் வூல்வ் இலங்கையில் சமஷ்டி முறையை (சுவிஸ் முறையுடன் ஒப்பிட்டு) எவ்வாறு நடைமுறைப் படுத்த முடியும் என்ற தெளிவான விபரங்களுடன் அன்றைய பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அனுப்பிய மகஜரை குணசேகர பிற்காலத்தில் படிக்காமல் விட்டிருக்க வாய்ப்பில்லை.

மலையக மாவட்டங்களில் செறிவாக வாழும் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர் சமூகமும் கூட பயனடையக்கூடியதாக எவ்வாறு சமஷ்டி முறையை நடைமுறைப் படுத்தலாம் என்ற விளக்கத்தையும் வூல்வ் அளித்திருந்தார்.

சுவிட்சர்லாந்தின் சமஷ்டி முறை குறித்து 'சண்டே ஒப்சேர்வர்" பத்திரிகை கடந்த ஞாயிற்றுக்கிழமை (13 ஆகஸ்ட் 2023) எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்த ஆரோக்கியமான கருத்தையாவது கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் படித்தாரோ தெரியவில்லை.

'13 வது திருத்தம் தொடர்பில் நடவடிக்கைக்கான நேரம்" என்ற தலைப்பிலான அந்த ஆசிரிய தலையங்கத்தின் ஒரு பந்தி வருமாறு:

'அதிகாரப்பரவலாக்கம் பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை. எமது நெருங்கிய அயல் நாடான இந்தியா இதற்கு உன்னதமான ஒரு உதாரணமாகும். கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவை உட்பட வேறு பல நாடுகளையும் அவ்வாறு கூற முடியும். சிறிய நாடுகளில் அதிகாரப் பரவலாக்கம் தேவையற்றது என்றும் பயன்தராது என்றும் கூறுவது தவறானது.

'இலங்கையை விடவும் (பரப்பளவு 65,610 சதுர கிலோ மீட்டர்) சிறிய நாடாக (பரப்பளவு 41,285 சதுர கிலோ மீட்டர்) சுவிட்சர்லாந்து இருக்கின்ற போதிலும், அது 26 கன்ரோன்களாக அல்லது மாகாணங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கு மாத்திரமல்ல, சகல முக்கியமான விவகாரங்கள் தொடர்பிலும் வயதுவந்தவர்கள் வாக்களிப்பதற்கு உரிமையை வழங்கி நேரடி ஜனநாயகத்தை பின்பற்றுகின்ற மிகச்சில நாடுகளில் ஒன்றாகவும் சுவிட்சர்லாந்து விளங்குகிறது."

இது இவ்வாறிருக்க, கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான வீரசுமண வீரசிங்கவும் ஜனாதிபதியினால் ஆளுநர்களாக நியமிக்கப்படும் கையாட்களின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாணசபைகளுக்கு 13 வது திருத்தத்தில் உள்ள முழு அதிகாரங்களையும் வழங்கினால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்ததாக 11 ஆகஸ்ட் 2023 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆளுநர்களினால் நிருவகிக்கப்படும் மாகாணசபைகளுக்கு தேர்தல்களை நடத்தி மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளினால் அவை நிருவகிக்கப்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி படிப்படியாக 13 வது திருத்தத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றுதான் வீரசிங்க கேட்டிருக்கவேண்டும். அதை விடுத்து ஆளுநர்களின் நிருவாகத்தினால் ஏற்படக்கூடியது என்ற அவர் சந்தேகிக்கும் ஆபத்தைக் காரணங்காட்டி பொருத்தமில்லாத வகையில் 13 வது திருத்தத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்திருக்கும் சக்திகளின் வாதத்துக்கு வலுச்சேர்ப்பது போன்று கருத்துவெளியிட்டிருக்கக்கூடாது.

இனப்பிரச்சினையில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக கம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடித்துவரும் நிலைப்பாடுகள் தொடர்பில் இந்த கட்டுரையாளருக்கு எந்தவிதமான தடுமாற்றமும் கிடையாது. ஆனால், மீண்டும் பேரினவாத அரசியல் அணிதிரட்டலை முழுவீச்சில் முன்னெடுப்பதற்கு 13 வது திருத்தம் தொடர்பாலான சர்ச்சையை பயன்படுத்தும் சக்திகளுக்கு உதவக்கூடிய கருத்துக்களையாவது குறைந்தபட்சம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் தான் அவர்களின் அண்மைய கருத்துக்கள் தொடர்பில் விமர்சனங்களை முன் வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் 80 வது வருட நிறைவை (ஜூலை 3) முன்னிட்டு இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக ஜூன் 25 'சண்டே ஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் இனப்பிரச்சினை தொடர்பில் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களை எமது வாசகர்களின் கவனத்துக்கு கொண்டுவருவது

(18ஆம் பக்கம் பார்க்க)

பனங்காட்டான்

# எவிடம் எவிடம், மதமடி மதமடி! எவிடம் எவிடம், மலையடி மலையடி!

ஒரே நேரத்தில் எத்தனை பிரச்சனைகளுக்கு ஒருவரால் முகம் கொடுக்க முடியும்? மிகவும் சிரமமானது என்று மட்டும் பதில் சொல்லலாம். ஓர் இனம் ஒரே வேளையில் தொடர்ச்சியாக பல ஆண்டுகளுக்கு அடுக்கடுக்கான பிரச்னைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்க முடியும்? இதற்குச் சரியான பதிலாக ஈழத்தமிழர்களின் இன்றைய போராட்டங்களையே சுட்டலாம்.

இலங்கைக்கு பிரித்தானியர் சுதந்திரம் வழங்கியதாகக் கூறிய காலத்திலிருந்து இன்றுவரை அந்தச் சுதந்திரத்தை அனுபவிக்கும் சிங்கள இனம் குடிசன எண்ணிக்கையால் கூடுதலானவர்களாக இருப்பதால் குறைந்த எண்ணிக்கையினரான தமிழ் இனத்தை ஆளப்படும் இனமாக்கிக் கொண்டு ஏற்படுத்திய அயோக்கிய அரசியலே தமிழர் பிரச்சனைகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

தமிழரின் முதல் அரசியல் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலம் சிறுபான்மை இனங்களுக்கு நாடாளுமன்றத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டது ஆரம்ப அத்தியாயம். காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்ற எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலான அணி தமிழரசுக் கட்சியை உருவாக்கி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தது அடுத்த அத்தியாயம். பிரதமர்களாகவிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க ஆகியவர்களுடன் தமிழரசுக் கட்சி ஒப்பந்தம் செய்து ஏமாற்றப்பட்டது இன்னொரு அத்தியாயம்.

1956இல் கிழக்கு மாகாணத்தின் கல்லோயா அபிவிருத்தியை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின்போது இனரீதியான தாக்குதலை முதன்முதலாக தமிழர் அனுபவிக்க நேர்ந்தது. இதில் கிடைத்த ருசி இவ்வாறான பல தாக்குதல்களை சிங்களவர் தொடர வாய்ப்பளித்தது.

இனரீதியான தாக்குதலை தொடர்ந்து மொழிரீதியான தாக்குதலை தமிழர் மீது சிங்கள தேசம் ஆரம்பித்தது. 1944ம் ஆண்டு சட்டசபை அங்கத்தவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன இதற்கு பிள்ளையார் சுழி போட்டார். நாட்டின் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தைச் சட்டமாக்க வேண்டுமென ஜே.ஆர்.முன்வைத்த தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது.

1954ல் சிங்கள மகாசபையை உருவாக்கி, அதன் வழியாக பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பிரதமரான பண்டாரநாயக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தன முன்னெடுத்த சிங்களம் உத்தியோகபூர்வ மொழி என்பதை, சிங்களம் மட்டும் என்ற சட்டமாக 1956ல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி இனப்பிரச்சனையுடன் மொழிப்பிரச்சனையையும் இணைத்து விட்டார்.

1972ல் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க புதிய அரசியலமைப்பை உருவாக்கி இலங்கையை



சிறீலங்கா ஜனநாயக சோசலிஸ குடியரசாக மாற்றினார். ஏற்கனவே தமிழருக்கு அரசமைப்பு ரீதியாக இருந்த அற்ப உரிமைகூட புதிய அரசியலமைப்பினால் இல்லாமலாக்கப்பட்டது. 1974ல் சிறீமாவோ அரசு தமிழ் மாணவர் பல்கலைக்கழக அனுமதிக்கு இனரீதியான மொழிரீதியான விகிதாசார முறையில் தரப்படுத்தலை நிறைவேற்றி, தமிழ் இளையோரின் எதிர்காலத்தை படுகொலை செய்தது.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழினம் இனரீதியான, மொழிரீதியான, உயர் கல்வி ரீதியான மூன்று வகை தாக்குதலை எதிர்த்து சமகாலத்தில் போராட நேர்ந்தது.

1944ல் சட்டசபையில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் பிரேரணையை சமர்ப்பித்தபோது மற்றைய சிங்களத் தலைவர்கள் தெரிவித்த கருத்தை இப்போது மீள நினைத்தால் அவர்களின் ஏமாற்றுவித்தையை அறிந்து கொள்ளலாம்.

தமிழர் இனப்பிரச்சனையை மொழிப்பிரச்சனையாக எவரும் பார்க்காது தேசிய இன அடிப்படையில் பார்த்து கருத்துகளை கூற வேண்டுமென்று சொன்னவர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க. தமிழ் மக்கள் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை கொண்டவர்கள் என்ற தீர்மானத்தை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அதே ஆண்டில் நிறைவேற்றியது.

இலங்கையில் இரு மொழியானால் ஒரு நாடு! அது ஒரு மொழியானால் இரு நாடு என்று கருத்துக் கூறியவர் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா. 1972ல் சிறீமாவோ ஆட்சியில் புதிய அரசியலமைப்பு விவகார அமைச்சராகவிருந்து தமிழருக்கான உரிமைகளை அறவே அகற்றியவர் இதே கொல்வின் ஆர்.டி.சில்வாவே.

தமிழும் சிங்களமும் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளாக்கப்பட வேண்டுமென 1955ல் வாதிட்ட லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி என்.எம்.பெரேரா அதற்கான ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்

> **1968இல் திருமலை கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை புனித நகரமாக அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க பிரகடனம் செய்ததன் தொடராக இப்போது தமிழர் தாயகத்திலுள்ள வெடுக்குநாறிமலை, குருந்தூர்மலை, வெருகல்மலை, கீரிமலை என பெயர் கொண்ட இடங்களை தொல்லியல் திணைக்களம் தேடி அலைந்து வர்த்தமானி அறிவித்தலூடாக கையகப்படுத்தி வருகிறது. மலை எதுவும் இல்லாத தமிழர் தாயகம் 'மலை' பேரால் தோண்டப்படுகிறது - அரச மரங்களை நாடி புத்தர் சிலையுடன் ஓடுவது போன்று.**

மொழிந்தவர். அத்துடன் நிற்காது, தேசிய இனப்பிரச்சனையின் அடிப்படையில் சமஷ்டி முறையிலான தீர்வு காணப்படவில்லையானால் தமிழர்கள் பிரிந்து சென்று இந்தியாவுடன் இணைந்து விடக்கூடிய வழிமுறைகள் உண்டென்று அன்று எச்சரிக்கை செய்தவரும் இவரே.

இதே கருத்தை வலியுறுத்தி சோல்பரி அவர்கள் அடங்காத் தமிழர் முன்னணியின் தலைவர் திரு.ஸி.சுந்தரலிங்கத்துக்கு எழுதிய கடிதமொன்று ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மேற்சொல்லப்பட்ட விடயங்களை இன்றைய தமிழ் தேசிய அரசியல்வாதிகளும் அவரது கட்சிகளும் எந்தளவுக்கு நினைவில் கொண்டிருப்பார்களோ தெரியாது.

இனரீதியாக, மொழிரீதியாக, உயர் கல்வி உரிமை ரீதியாக ஒடுக்கப்பட்டு வந்த ஈழத்தமிழினம் மதரீதியாகத் திட்டமிட்டு அரச உயர்மட்டத்தில் பாகுபாடு காட்டப்பட்ட முதலாவது நிகழ்வு எனது நினைவுக்கு எட்டிய வகையில் 1968ம் ஆண்டில் ஆரம்பமானது. 1965 - 1970 வரையிலான டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகவிருந்தார். 1968 பிற்பகுதியில் அமைச்சருக்கு அறிவிக்காது திருமலை கோணேஸ்வர ஆலய கோட்டைப் பகுதியை புனித நகரமாக பிரதமர் டட்லி சேனநாயக்க தம்மிஷ்டப்படி பிரகடனம் செய்தார்.

தமது அமைச்சின் கீழான விடயத்தை தம்முடன் கலந்தாலோசிக்காது பிரதமர் டட்லி சேனநாயக்க அவரது இஸ்டப்படி கையாண்டதைக் கண்டித்து 1968 நவம்பரில் அமைச்சர் பதவியிலிருந்து மு. திருச்செல்வம் ராஜினாமா செய்தார். இலங்கை அரசியல் வரலாற்றில் இது ஓர் முக்கிய நிகழ்வு. இலங்கையின் பிரதமர்களில் கண்ணியமான அரசியல்வாதியென மதிக்கப்பட்டு வந்த டட்லி சேனநாயக்க, திருமலை விடயத்தில் தாமும் ஒரு சிங்கள பௌத்தரே என்பதை நிரூபிப் பதாக இந்தச் சம்பவம் அமைந்தது.

திருமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழர் வழிபாட்டுத் தலங்களை ஆக்கிரமிக்கும் சிங்கள தேசத்தின் செயற்பாடு இப்போது சுனாமி வேகத்தில் வீச்சு கொண்டுள்ளது. இதனை அரசாங்கத்தின் துணைக்கரங்களான தொல்லியல் திணைக்களம், வனவளப் பாதுகாப்பு திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி செயலகம், மாகாண செயலக காணிப்பதிவு அலுவலகம் போன்றவைகள் இலகுவாக மேற்கொண்டு வருகின்றன.

இலங்கையின் மத்தியிலுள்ள சிவனொளிபாதமலை (சிவன் - ஒளி - பாதமலை) என்பது இன்று பௌத்தர்களுக்கு மட்டுமான கௌதம புத்தர் பாதம்பட்ட மலையாக அரச இயந்திரங்களால் மாற்றப்பட்டு பராமரிக்கப்பட்டு பூசிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக தமிழர் பாரம்பரிய நிலங்கள் தொல்பொருள் என்ற பெயரில் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு உடந்தையாக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு தமிழர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கின்றன.

முக்கியமாக, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு கிழக்கில் அரசின் ஆசிர்வாதத்துடன் அத்துமீறல் இடம்பெறுகிறது. வெடுக்குநாறி மலை, குருந்துார் மலை எனப்படும் ஆதிசிவன் ஆலயம் என்பவற்றைக் காப்பாற்ற மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். தமிழர் பாரம்பரிய பிதிர்க்கடன் செய்யும் கீரிமலை கேணியையும் தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானி ஊடாக அடையாளப்படுத்தியுள்ளது. திருமலையில் வெருகல்மலையிலிருந்த நீலி அம்மன் ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கிவிட்டு அதில் பௌத்த வழிபாட்டுத் தலம் நிறுவும் முயற்சி எடுக்கப்படுகிறது.

இலங்கையில் இயற்கையாக மலைகளும், நதிகளும் (கங்கைகள்) இல்லாத பகுதியாக வடக்கும் கிழக்கும் உள்ளன. ஆனால், நகரங்களுக்கும் இடங்களுக்கும் அடையாளமாக சில மலைகள் இங்குண்டு. திருமலை, சுதுமலை, கம்பர் மலை என்பது போன்று வழிபாட்டுக்குரிய சில இடங்கள் மலைகள் என்ற பெயரில் அமைந்துள்ளன.

அவ்வாறான குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, கீரிமலை, வெருகல் மலை போன்ற புனித இடங்களை தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு இலக்கு வைப்பது தெரிகிறது. இதன் நோக்கம் என்ன? குருந்துார்மலையில் ஒருநாள் பொங்கலுக்கு காவற்துறை, நீதிமன்றம் என்று அலையும் சூழ்நிலையை பௌத்த வெறியாட்டம் ஏற்படுத்தியுள்ளது. இதுதான் நிலைமை என்றால் ஒவ்வொரு பொங்கலுக்கும் ஒவ்வொரு பூசைக்கும் நீதிமன்றத்திடம் அனுமதி பெற வேண்டியது கட்டாயமாக்கப்படுகிறது போன்று தெரிகிறது. பௌத்தம் போதிக்கும் தர்மம் தமிழர் தாயகத்தின் அரச மரங்களையும் மலை என்ற பெயரிலுள்ள இடங்களையும் சிங்களமாக்க முனைவதுதானா?

பள்ளிப்பராயத்தில் சொல்லித்தரப்பட்ட ஒரு பாடல் அர்த்தமுள்ளது - எவிடம் எவிடம், புளியடி புளியடி என்பது அப்பாடல். இதனை சற்றே மாற்றி, எவிடம் எவிடம், மதமடி மதமடி - எவிடம் எவிடம் - மலையடி மலையடி என பாடும் காலம் வந்துள்ளது.



# டொலருக்குப் பதிலாக இந்திய ரூபா: இந்தியா - எமிரேட்ஸ் ஒப்பந்தத்தால் அமெரிக்காவுக்கு என்ன பிரச்னை?

தில்நவாஸ் பாஷா

இந்தியாவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் அமெ ரிக்க டொலருக்கு பதிலாக பரஸ்பர நாணயத்தில் இரு தரப்பு வர்த்தகத்தை தொடங்கியுள்ளன.

மத்திய கிழக்குப்பகுதியில் எண்ணெய் உற்பத்தி நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபி நேஷனல் ஒயில் நிறுவனத்திடம் இருந்து இந்தியாவின் முன்னணி எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஒயில் கார்பரேஷன், பத்து லட்சம் பீப்பாய்கள் எண்ணெயை இந்திய ரூபாயை கொடுத்து வாங்கியுள்ளதாக இந்திய அரசு கடந்த திங்களன்று தெரிவித்தது.

இதுவரை எண்ணெய் வணிகம் அமெரிக்க டொலரில்தான் நடந்து வந்தது.

இதற்கு முன்பு ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த தங்க வியாபாரி ஒருவர், இந்திய தொழிலதிபர் ஒருவருக்கு 25 கிலோ தங்கத்தை 12.8 கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு விற்றுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜூலை மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்குச் சென்றிருந்தார். அப்போது தத்தமது நாணயத்தில் வணிகம் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன. இது மட்டுமின்றி இந்தியாவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் தங்களது டிஜிட்டல் பேமெண்ட் முறைகளான ரூஜ ஐயும், உடனடி பணம் செலுத்தும் தளத்தையும் இணைக்க ஒப்புதல் அளித்துள்ளன.

### வலுவடையும் இந்திய - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உறவு

2022 ஆம் ஆண்டில் இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே ஒரு சிஜபி அதாவது விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இது இரு நாடுகளுக்கும் இடையே வணிகத்தை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் எந்தவொரு நாட்டுடனும்



இந்தியா மேற்கொண்ட முதல் கட்டுப்பாடற்ற வர்த்தக ஒப்பந்தம் இதுவாகும். முன்னதாக 2011-ம் ஆண்டு ஜப்பானுடன் இந்தியா இதேபோன்ற இருதரப்பு ஒப்பந்தம் செய்து கொண்டது. அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் இந்தியா அதிக வர்த்தகம் செய்கிறது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு இந்தியா அதிக ஏற்றுமதி செய்கிறது.

இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான ஆண்டு வர்த்தகம் 85 பில்லியன் டாலரில் இருந்து 100 பில்லியன் டாலராக உயரும் என்று இந்த ஒப்பந்தத்திற்குப் பிறகு பிரதமர் நரேந்திர மோடி கூறியிருந்தார்.

இந்தியா- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது.

தற்போது இந்தியாவில் நான்காவது பெரிய முதலீட்டாளராக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளது. இந்தியாவில் அதன் முதலீடு 3 பில்லியன் டாலருக்கும் அதிகமாக உள்ளது.

2020-21ஆம் ஆண்டில் இந்தியாவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முதலீடு 1.03 பில்லியன் டாலர்கள் மட்டுமே இருந்தது என்ற விஷயத்திலிருந்தே, முதலீடு அதிகரித்து வரும் வேகத்தைப் புரிந்து கொள்ளலாம்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 8 ஆண்டுகளில் ஐந்து முறை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ளார்.

“பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பிறகு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் வளைகுடா நாடுகளுடனான உறவில் சிறப்பு கவனம் செலுத்தினார்,” என்று இந்திய உலக விவகாரங்கள் சபையின் உறுப்பினரும், மத்திய கிழக்கு விவகாரங்களில் நிபுணருமான ஃபஸுர் ரஹ்மான் சித்திக்கி குறிப்பிட்டார்.

“கடந்த எட்டு முதல் பத்து ஆண்டுகளில், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான இரு தரப்பு உறவுகளின் மையமாக வணிகம் ஆகியுள்ளது.

முன்பு அரசியல் செயல் உத்தி நடந்து கொண்டிருந்தது. ஆனால் மோடி அரசு வந்த பிறகு இப்போது வணிக செயல் உத்தி முக்கியத்துவம் பெற்றுள்ளது,” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இந்தியா தனது செல்வாக்கை அதிகரித்து வருவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆட்சியாளர்களுடனான உறவையும் வலுப்படுத்தியுள்ளார்.

“ரூபாய் மற்றும் திர்ஹாமில் தொழில் தொடங்குவது இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்தும் அடையாளமாகும்” என்று சித்திக்கி கூறுகிறார்.

அதே நேரத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இந்தியாவில் முதலீடுகளை அதிகரித்து வருகிறது. இந்தியாவின் ஸ்டார்ட் அப் இந்தியா மற்றும் மேக் இன் இந்தியா இயக்கங்களில் முதலீட்டு வாய்ப்புகளை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் காண்கிறது.

“இந்தியாவின் பல துறைகளும் முதலீடுகளுக்கு திறக்கப்பட்டு வருகின்றன. வளைகுடா நாடுகளில் நிறைய பணம் இருக்கிறது. இந்தப் பணத்தை இந்தியா தன்னை நோக்கி ஈர்க்க முடியும். பாதுகாப்புத்துறையில் கூட கூட்டு உற்பத்தி யோசனையை இந்தியா முன்வைத்துள்ளது,” என்று சித்திக்கி குறிப்பிட்டார்.

இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணையை வாங்க ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் பாதுகாப்புத் துறையில் ஒத்துழைப்பை அதிகரித்து வருகின்றன.

### இந்தியாவின் வர்த்தக நுழைவாயிலா ஐக்கிய அரபு எமிரேட்ஸ்?

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இந்தியாவின் முக்கிய வர்த்தக கூட்டாளியாகும். இந்தியாவின் பெரிய அளவிலான வர்த்தகம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வழியாக செய்யப்படுகிறது. அது இந்தியாவின் வணிகத்திற்கான நுழைவு வாயிலாக கருதப்படுகிறது. உதாரணமாக பாகிஸ்தானுடன் இந்தியா சுமார் 5 பில்லியன் டாலர் வர்த்தகத்தை துபாய் வழியாக செய்கிறது. ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பல நாடுகளுடன் இந்தியா துபாய் வழியாகவே வர்த்தகம் செய்கிறது.

“ரஷ்யாவிடம் இருந்து இந்தியா சமீபத்தில் சீன நாணயமான யுவானை கொடுத்து எண்ணெய் வாங்கியது. இந்தப் பரிவர்த்தனையும் துபாய் வழியாகவே நடந்தது. இத்தகைய வணிகம் செய்வது ஒரு நல்ல தொடக்கம். மற்ற நாடுகளுடனும் இந்தியா இதைச் செய்ய வேண்டும்,” என்று மூத்த செய்தியாளரும் எரியாற்றல் நிபுணருமான நரேந்திர தனேஜா கூறினார்.

டொலரை பாதிக்குமா?

இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையே டொலருக்கு பதிலாக ரூபாய் மற்றும் திர்ஹாமில் வர்த்தகம் தொடங்கியிருப்பது உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்க டொலர் செலுத்தும் ஆதிக்கத்தின் மீது விழுந்துள்ள அடியாகவும் கருதப்படுகிறது.

“டீடாலரைசேஷன் அலை (டொலருக்கு பதிலாக வேறு நாணயத்தை பயன்படுத்துவது) நடந்து கொண்டி ருக்கிறது, சீனாவும் இதை முயற்சிக்கிறது. முன்னதாக லிபியாவின் ஆட்சியாளரான கர்னல் கதாஃபி தனது காலத்தில் டொலர் அல்லாத நாணயங்களில் எண்ணெய் விற்க முன்வந்தார். இப்போது இந்தியா உட்பட பல நாடுகள் இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன,” என்று ஃபஸுர் ரஹ்மான் சித்திக்கி தெரிவித்தார்.

“ரஷ்யா, சிரியா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்குப் பிறகு மற்ற நாடுகள் பயந்துபோயுள்ளன. தங்கள் வணிகத்திற்கு முழுமையாக டொலரை சார்ந்திருக்க அவை விரும்பவில்லை. புதிய மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க அவை விரும்புகின்றன,” என்றார் சித்திக்.

சீனாவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுடன் தனது நாணயத்தில் வர்த்தகம் செய்கிறது. சீனா ஈரானுடனும் அதையே செய்கிறது. இவை அனைத்தும் உலக சந்தையில் அமெரிக்க டொலரின் செல்வாக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும்’’ என்கிறார் அவர்.

“இது ஒரு நல்ல தொடக்கம். ஆனால் இது டொலருக்கு மாற்றாக ஆகும் என்று கூறுவது அவசரத்தனமாக இருக்கும்” என்று நரேந்திர தனேஜா குறிப்பிட்டார்.

“டொலருக்கு நிகரான வலு இல்லாவிட்டாலும் இப்போது இந்திய ரூபாய் வலுவான கரன்ஸியாக கருதப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில் இந்திய ரூபாயின் சர்வதேசமயமாக்கல் நடைபெறுகிறது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான ஒப்பந்தத்தையும்



அதே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.”

“ஆனால் உலகின் எண்ணெய் மற்றும் எரிவாயு வணிகம் ரூபாயில் அல்லது திர்ஹாமில் தொடங்கும் என்று இதன் அடிப்படையில் கூற முடியாது. ஐக்கிய அரபு எமிரேட்ஸின் நாணயமான திர்ஹாமும் டொலரால் ஆதரிக்கப்படுகிறது. எனவே ரூபாய் மூலமான பரிவர்த்தனை, அமெரிக்க டொலரின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறுவது அவசரத்தனமாக இருக்கும்,” என்று தனேஜா கூறினார்.

இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான ரூபாய் வர்த்தகத்தின் காரணமாக மற்ற நாடுகளிலும் ரூபாயின் அங்கீகாரம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

### இது இந்தியாவுக்கு பொருளாதார ரீதியாக பலன் தருமா?

“எண்ணெய் வாங்குவதற்கு ரூபாயில் பணம் செலுத்த முடிந்தால் இந்தியாவுக்கு அது மிகவும் நன்மை தரும். ஏனென்றால் எண்ணெய்க்காக டொலர்களை வாங்க இந்தியா டிரில்லியன் கணக்கான ரூபாய்களை இப்போது செலவழிக்க வேண்டியுள்ளது. எல்லா எண்ணெய் விற்பனை செய்யும் நாடுகளிடமிருந்தும் இந்தியா தனது சொந்த நாணயத்தில் எண்ணெய் வாங்க முடிந்தால், அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்தியா அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது,” என்று தனேஜா கூறுகிறார்.

“இந்தியா மற்றும் துபாய் இடையே ரூபாய் பரிவர்த்தனைகள் அதிகரித்தால், மற்ற நாடுகளும் அதை அதிகமாக ஏற்றுக் கொள்ளும். இது உலக அளவில் ரூபாயை வலுப்படுத்தும்,” என்றும் தனேஜா குறிப்பிட்டார்.

“துபாய் மூலம் நடைபெறும் வணிகத்தின் ஒரு பகுதி திர்ஹாம் அல்லது ரூபாயில் இருக்க வேண்டும் என்று இந்தியா கண்டிப்பாக விரும்புகிறது. ஆனால் தற்போது பரிவர்த்தனைகள் முழுவதும் ரூபாய் அல்லது திர்ஹாமில் நடக்கும் என்று சொல்ல முடியாது. இனிவரும் காலங்களில் ரூபாயின் ஏற்புத்தன்மை அதிகரிக்கும் என்பது உறுதி. இருப்பினும் துபாய் மற்றும் அபுதாபி சந்தைகளில் ஏற்கனவே ரூபாய் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது,” என்றார் அவர்.

80 லட்சத்திற்கும் அதிகமான இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் வாழ்கின்றனர். இதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் சுமார் ஒரு கோடி மக்கள் தொகையில், 35 சதவிகிதம் பேர் இந்திய வம்சாவளி



யைச் சேர்ந்தவர்கள். “இந்திய மக்கள் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு” என்கிறார் சித்திக்கி.

இவர்கள் தங்கள் வருவாயில் இருந்து ஆண்டுக்கு சுமார் 55 பில்லியன் டாலர்களை இந்தியாவுக்கு அனுப்புகிறார்கள். இந்தப் பணம் தொடர்ந்து டொலரில் வர வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்று தனேஜா கருதுகிறார்.

“இந்தப் பணம் டொலரில் வர வேண்டும் என்று அரசு விரும்புகிறது. ஏனெனில் இந்தியா அதன் மூலம் மதிப்பு கொண்ட கரன்ஸியை பெறுகிறது. அது நன்மை தருகிறது. மத்திய கிழக்கிலிருந்து இந்தியர்கள் மூலம் வரும் டொலர் அல்லது யூரோ இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கிறது,” என்று தனேஜா சுட்டிக்காட்டினார்.

இந்தியாவும் ஐக்கிய அரபு அமீரகமும் உடனடி பணம் செலுத்து இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் எளிதாகும்.

# தமிழர் பகுதிகளில் பௌத்தமயமாக்கல் நடக்கிறதா? புத்த விகாரை எழுப்ப மக்கள் எதிர்ப்பு!

திருகோணமலை - நிலாவெளி பகுதியிலுள்ள பெரிய குளம் பொரலுகந்த ரஜமகா விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதை தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொரலுகந்த ரஜமகா விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சீலவங்கதிஸ்ஸவிற்கு, பிரதேச செயலாளர் ஊடாக செந்தில் தொண்டமான் அறிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் ஆகியோரின் கோரிக்கைக்கு அமையவே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விகாரை அமைக்க பகுதி மக்கள் எதிர்ப்பு**

பொரலுகந்த ரஜமகா விகாரையின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில், விகாரையை அண்மித்துள்ள மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாக ஆர். சம்பந்தன், ஆளுநருக்கு அறிவித்துள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த ஆளுநர், பிரதேச செயலாளர் ஊடாக, இந்த உத்தரவை, விகாரைக்கு அறிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, குறித்த பகுதியை அண்மித்து, புதிதாக விகாரையொன்றை நிர்மாணிப்பதற்கு அம்பிட்டிய சீலவங்கதிஸ்ஸ தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கைக்கு அமைய, குறித்த பகுதியில் விகாரையொன்றை நிரமாணிப்பதற்கு 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09ம் தேதி புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு அனுமதி வழங்கியுள் ளது.

எனினும், குறித்த பகுதியானது 99.9 வீதம் தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட பகுதி என ஆளுநர் செந்தில் தொண்டமானினால் நடத்தப்பட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த பகுதியிலுள்ள மக்கள் தொடர்பான அறிக்கையொன்றை கடவத் பிரதேச செயலாளர் வெளியிட்டுள்ளார்.

இதன்படி, இலுப்பைகுளம் பகுதியில் நான்கு உறுப்பினர்களை கொண்ட 2 சிங்கள குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, இலுப்பைகுளம் பகுதியில் 2202 உறுப்பினர்களை கொண்ட 538 தமிழ் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.







அத்துடன், பெரியகுளம் பகுதியில் நான்கு உறுப்பினர்களை கொண்ட 3 சிங்கள குடும்பங்களும், 1789 உறுப்பினர்களை கொண்ட 626 தமிழ் குடும்பங்களும் வாழ்ந்து வருவதாக கடவத் பிரதேச செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மயமாக்கல் நடைபெறுவதாக குற்றச்சாட்டு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதியில் பலவந்தமான முறையில் பௌத்த மயமாக்கல் இடம்பெற்று வருவதாக கடந்த காலங்களில் தமிழர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தனர்.

ரஞ்சன் அருண் பிரசாத்

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலை பகுதியில் சிவன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டு, அந்த இடம் பௌத்தர்களுக்கு சொந்தமானது என பௌத்தர்கள் கூறிய நிலையில், கடந்த மாதம் அங்கு அமைதியின்மை நிலவியது.

அவ்வாறு பல்வேறு பகுதிகளில் இவ்வாறான பிரச்னைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தன. இந்த நிலையிலேயே, திருகோணமலை பொரலுகந்த ரஜமகா விகாரை நிர்மாணிக்க தயாராகிய பின்னணியில், அதனை ஆரம்பிப்பதை தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவிட்டுள்ளார்.

பௌத்தர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இவ்வாறான பௌத்த விகாரைகளை அமைப்பதற்கு தான் ஆதரவு எனவும் செந்தில் தொண்டமான் கூறினார். எனினும், அத்துமீறி நிர்மாண பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படாது என அவர் குறிப்பிடுகின்றார்.

பௌத்த விகாரையொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு தடை விதிக்கும் வகையில் ஆளுநர் ஒருவர் செயற்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

# பெற்றோரும் குழந்தைகளும்

ந. முத்துமணி

உற்சாகம் வழிந்தோடும் பருவம் குழந்தைப் பருவம். கவலை, பயம், பதற்றம், விரக்தி எதுவும் அண்டாத பருவம் களங்கமில்லாத மாசறு பொன்னாய் துலங்கும் பருவம். எதை கண்டாலும், எங்கு இருந்தாலும் புத்துணர்வைத் தழுவிக் கொள்ளும் பருவம். மகிழ்ச்சி ஊற்றெடுக்கும் அழகான பருவம் குழந்தைப் பருவம்.

இந்த குழந்தைப் பருவம் அண்மைகாலமாக தடுமாற்றத்தில் தவித்துக் கொண்டிருக்கிறது. கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பு, 7 சதவீத குழந்தைகள் பயத்தாலும் கவலையாலும் பாதிக்கப்பட்டிருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பயம் தொற்றிக்கொள்வதற்கான அறிகுறிகள் காணப்பட்ட குழந்தைகள் 20 சதவீதத்தினர்.

கொரோனா பெருந்தொற்று காலத்திற்குப் பின்பு, குழந்தைகளிடையே பயம், கவலை, தவிப்பு போன்ற எதிர்மறை சிந்தனைப்போக்கு பெருகிவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். கொரோனா பெருந்தொற்று, அவர்களை சக நண்பர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், அண்டை வீட்டார் ஆகியோரிடமிருந்து தனிமைப்படுத்தியதன் விளைவாக, பய உணர்வு குழந்தைகளிடம் தொற்றிக் கொண்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

குழந்தைகளின் மனநலம் சிதையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுவதற்கான அறிகுறிகளை பெற்றோர்கள் முன்னரே அறிந்துகொண்டுவிட்டால், அதிலிருந்து குழந்தைகளை பாதுகாத்துவிடலாம் என்பது குழந்தை மனநல மருத்துவர்களின் கருத்தாகும்.

மனநல குறைபாட்டு அறிகுறிகள் என்றால் என்ன? குழந்தைகளின் இரவு தூக்கம், காலையில் எழும் பழக்கம், காலை சிற்றுண்டி, பள்ளிக்கு செல்லும் ஆர்வம், பள்ளியில் விளையாட்டு, சக குழந்தைகளோடு பழகும் முறை, இரவில் குடும்பத்துடன் உணவு போன்ற வழக்கமான பணிகளில் ஏற்படும் மாற்றங்களை பெற்றோர் கூர்ந்து கவனிக்க வேண்டும். எழுச்சியோடு காணப்படும் குழந்தை, திடீரென கூச்சப்படும். இது தான் மாற்றத்தின் அறிகுறி.

பள்ளிக்குச் செல்ல சில குழந்தைகள் முரண்டு



பிடிக்கும். இதற்கான காரணம், பயம், தவிப்பு, கவலை. இந்த சிக்கலை எதிர்கொள்ள சில வழிமுறைகளை பெற்றோர்கள் கடைபிடிக்க வேண்டும்.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதைத் தவிர்க்க, தலைவலி, வயிற்றுவலி போன்ற காரணங்களைக் கூறுவார்கள். அவர்களுக்குத் தூக்கமும் சரியாக வராது. பள்ளிப் பாடம், வீட்டுப்பாடம், தேர்வு, ஆசிரியரின் அணுகுமுறை, சக நண்பர்களின் கேலிப்பேச்சு, நண்பர்களிடையே சண்டை இவற்றில் ஏதாவது ஒன்று குழந்தையின் பய உணர்வுக்குக் காரணமாகலாம். அவர்களிடம் ஏற்படும் மாற்றங்களை கண்டறிந்து, அது குறித்து அவர்களிடம் பேசுவது நல்ல விளைவுகளை உருவாக்கும்.

பக்கத்துவீடுகளில் வசிக்கும் குழந்தைகள்தான் நம் குழந்தையின் முதல் நண்பர்கள். சமூகத்தை காண குழந்தைக்கு மிகப்பெரிய சாளரம்தான் தெருக்கள். அங்கிருந்துதான் குழந்தை, சமூகத்தை உற்றுப்பார்க்கும். நல்லது, கெட்டது எதுவாக இருந்தாலும், அவற்றை சீர்தூக்கி குழந்தைகளை ஆற்றுப்படுத்துவதுதான் குழந்தையின் குண இயல்பை வடிவமைக்க உதவியாக இருக்கும்.

அக்கம்பக்கத்து குழந்தைகளுடன் தெருக்களில் கூடி விளையாடுவது குழந்தைகளின் பதற்றத்தை குறைக்கும் மாமருந்தாகும் என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. கட்டுப்பாடு இல்லாமல் ஆடுவது, ஓடுவது, பாடுவது, விளையாடுவது இவை தங்களை ஆட்கொண்டிருக்கும் பயத்தை தூக்கியெறிய குழந்தைகளுக்கு உதவும்.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, கைப்பேசி உள்ளிட்ட மின்னணுக் கருவிகளை பயன்படுத்தும் போக்கு குழந்தைகளிடம் பெருகிவிட்டது. அளவுக்கு அதிகமாக மின்னணுக் கருவிகளை பயன்படுத்துவதற்கும், குழந்தைகளிடையே உருவாகும் பயத்திற்கும் தொடர்பு உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குழந்தைகளிடம் இருந்து மின்னணுக்கருவிகளை விலக்குவது, பயத்தில் இருந்து குழந்தைகளை அப்புறப்படுத்துவதற்கான முதல் வழி.

குழந்தைகளின் உலகமாக கைப்பேசி மாறிவிட்டதால், உண்மையான உலகத்தை காண குழந்தை தவறிவிடும் ஆபத்து உள்ளது. இயலாமையால் தவிக்கும் போது, ஆதரவான வார்த்தைகள், அக்கறையான செயல்கள், அரவணைப்பான அணுகுமுறைகள், தன்னியல்பான பாசப்பிணைப்புகள், குழந்தைகளின் மனபலத்தை பெருக்கி, மன எழுச்சியை கட்டமைக்கும்.

குழந்தையோடு குடும்பம் உணர்வுபூர்வமாக கலந்திருக்க வேண்டும். குழந்தைகளின் உணர்வு கட்டமைப்பை ஆழப்படுத்துவது குடும்பம் என்ற அன்பான இடம் தான். குடும்பமாக உணவு உண்பது, கூடி விளையாடுவது, அரட்டை அடிப்பது, நீண்டதூர பயணம் மேற்கொள்வது, சுற்றுலா செல்வது, தன்னம்பிக்கை விதைக்கும் நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்வது இவை குழந்தைகளின் உணர்வுகளை பலப்படுத்தும்.

வெறுப்பு என்ற அம்பு குழந்தையை தாக்கிவிடாமல் பார்த்துக்கொள்வது மிகமிக முக்கியமாகும். நேருக்கு நேர் தோல்வியை சந்திக்கும்போது, குழந்தைகளின் மனம், குழம்பிய குட்டையாக இருப்பது இயல்பு. இது மனப்பதற்றத்திற்கு வழிவகுத்துவிடும். அந்த நேரத்தில் தன்னம்பிக்கை ஊட்டுவது பெற்றோரின் கடமையாகும்.

மனப்பதற்றத்தில் இருந்து விடுபட குழந்தைகளின் கவனத்தை வேறுபக்கம் திருப்புவது தீர்வாக அமையாது. அப்படி செய்வது, பதற்றத்தின் தீவிரத்தை குறைக்க உதவும் என்பது உண்மை. ஆனால், கவலை, பயத்தில் இருந்து விடுபடுவதற்கு அது உதவாது. மாறாக, நல்ல புத்தகங்களை வாசிக்க குழந்தைகளை ஊக்குவிக்கலாம். அது குழந்தைகளின் மன உறுதியைக் கூர்மையாக்குவதோடு மனநலனையும் செம்மையாக்கும்.

குடும்பம் துணையாக இருந்தால், எவ்வித அச்சத்தையும் துச்சமென கருதி குழந்தைகள் வீறுகொண்டு எழுவர். மனச்சிக்கல்களால் பாதிக்கப்படுவதற்கு முன் குழந்தையை பாதுகாக்க பெற்றோர்கள் முனைப்பாக செயல்பட வேண்டும்.

மகாகவி பாரதியின்

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா

என்ற வரிகளையும்

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா

என்ற வரிகளையும் நாம் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும்.



## சாதனை வசூல்

'ஜெயிலர்' படம் உலகம் முழுவதும் முதல் வாரத்தில் 375 கோடி (இந்திய) ரூபாய் வசூலித்துள்ளதாக சன் பிக்சர்ஸ் நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. தமிழ் திரையுலக வரலாற்றிலேயே முதல் வாரத்தில் வசூலான அதிக தொகை இதுதான் என்றும் கூறப்பட்டுள்ளது.

ரஜினிகாந்த் நடிப்பில் கடந்த 10ஆம் திகதி வெளியான இந்தப் படம் நல்ல வரவேற்பைப் பெற்றுவருகிறது. வெளியான முதல் நாளில் இருந்தே வசூலில் சாதனைப் படைத்து வருகிறது.

இந்தியா முழுவதும் இப்படம் 200 கோடி ரூபாயைத் தாண்டி வசூலித்துள்ளது.

# தனுஷுடன் ராஷ்மிகா



முதன்முறையாக தனுஷுக்கு ஜோடியாக நடிக்கவுள்ளார் ராஷ்மிகா மந்தனா. கேப்டன் மில்லர் படத்தில் நடித்து முடித்துள்ள தனுஷ், தனது 50ஆவது படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தை அவரே இயக்கவுள்ளார்.

இதைத் தொடர்ந்து தெலுங்கு இயக்குநர் சேகர் கம்முலா இயக் கத்தில் 51ஆவது படத்தில் நடிக்க வுள்ளார். இதில் நாயகியாக ராஷ் மிகா நடிக்கவுள்ளார். இதை ராஷ் மிகாவும் தனது ருவிற்றர் பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழ் தெலுங்கு, கன்னடம், ஹிந்தி மலையாள மொழிகளில் இந்தப் படம் தயாராகவுள்ளது. படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.

## இந்தியன் 2 கமல்!




ஷங்கர் இயக்கத்தில் கமல் நடித்துள்ள படம், 'இந்தியன் 2'. 'விக்ரம்' படத்தின் வெற்றிக்குப்பிறகு கமல் நடிக்கும் இந்தப் படத்தில், காஜல் அகர் வால், சித்தார்த், ராகுல் ப்ரீத் சிங், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி, பாபி சிம்ஹா உட்பட பலர் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பு முடிந்து விட்டது. கிராபிக்ஸ் பணிகள் அமெரிக்காவில் நடந்து வருகின்றன. இந் நிலையில், இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு இப்படத்தின் சிறப்புப் போஸ்ரரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அதில் 'சேனாபதி' கமல் தோற்றத்தில் வெளியான அந்த போஸ்ரர், சமூக வலைதளத்தில் வேகமாக பரவி வருகிறது.



## குன்றாத அழகு

'என் சுவாச காற்றே', 'நெஞ்சினிலே', 'நரசிம்மா' படங்களில் நடித்த இஷா கோபிகர், தற்போது சிவ கார்த்திகேயனின் 'அயலான்' படத்தில் வில்லியாக வருகிறார். இதன் மூலம் 22 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தமிழ் திரையுலகை இஷா கோபிகர் எட்டிப்பார்த்திருக்கிறார். 46 வயதானாலும் இன்னும் அழகு குறையாத நடிகையாக இருக்கும் இஷாவை, மேலும் பல படங்களில் நடிக்க வைக்க முயற்சிகள் நடக்கின்றன என்று தகவல்.

## இரு வேடங்களில் விஜய்



தளபதி - 68 படத்தில் நடிகர் விஜய் இரட்டை வேடத்தில் நடிக்கவுள்ளார். இதில் ஒரு கதா பாத்திரத்திற்கு ஜோடியாக நடிகை ஜோதிகா நடிக்கவுள்ளார் என்று ஒரு தகவல் வெளியாகி யுள்ளது.

விஜய் நடித்து வரும் 67ஆவது திரைப்படம் 'லியோ'. இந்த படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கி வருகிறார். இந்த படத் தின் மூலம் நடிகர் விஜயுடன் லோகேஷ் 2ஆவது முறையாக கூட்டணி சேர்ந்துள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், வரும் ஒக்ரோபர் மாதம் படத்தை வெளியீடு செய்யவாய்ப்பிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



## வாய்ப்புக்காக பாலியல்

தமிழில் 'கேடி பில்லா கில்லாடி ரங்கா', 'ராஜதந்திரம்', 'மாநகரம்', 'ஜெமினி கணேசனும் சுருளிராஜனும்', 'நெஞ்சம் மறப்பதில்லை' உட்பட பல படங்களில் நடித்தவர் ரெஜினா கஸண்ட்ரா. தெலுங்கு, ஹிந்தியிலும் நடித்து வரும் அவர், பட வாய்ப்புக்காக பாலியல் சலுகையை எதிர்பார்க்கும் சம்பவம் தனக்கும் நடந்ததாகக் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் அளித்த பேட்டியில், 'பட வாய்ப்பில்லாமல் இருந்த போது சிலரிடம் வாய்ப்புகள் கேட்டேன். ஒருவர் 'அட்ஜஸ்ட் மெண்ட்'டுக்கு தயாராக இருந்தால் உடனடியாக வாய்ப்புக் கிடைக்கும் என்றனர். இதற்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை. என் சம்பள விஷயம் பற்றி பேசுகிறாரோ என நினைத்தேன். பிறகு தான் என் மனேஜரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அப்போது எனக்கு 20 வயதுதான். அதன்பிறகு இதுபோன்ற சம்பவங்களை நான் எதிர்கொள்ளவில்லை' என்று கூறியுள்ளார்.


**திரைப்படம் - வெப்**
**இயக்கம் - ஹருன்**
**இசை - கார்த்திக் ராஜா**
**நடிப்பு - நட்டி, ஷில்பா மஞ்சுநாத்**




சினிமாவுக்கான கதையை உருவாக்கினால் மட்டும் போதாது, அதை ரசிக்கும் விதத்தில் திரைக்கதை அமைத்து சொல்வதில்தான் சூட்சுமம் அடங்கியிருக்கிறது. அது என்ன என்பது தெரியாமல்தான் பலரும் தவித்து வருகிறார்கள். ஓரளவுக்குத் தெரிந்தவர்கள் கூட தப்பித்து விடுகிறார்கள், தெரியாதவர்கள் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள்.

இந்த 'வெப்' படமும் வலையில் சிக்கிக் கொண்ட நான்கு இளம் பெண்களைப் பற்றிய ஒரு கதை. போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்கும் ஒரு படத்தை சொல்ல நினைத்து கதை எழுதியுள்ள இயக்குநர் 'அட்வைஸ்' என்பதை உச்சக் காட்சியில் மட்டும் சொல்லி விட்டு அதற்கு முன்பு வரை என்னென்னவோ சொல்லி இழுத்துவிட்டார்.

தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ஷில்பா மஞ்சுநாத் மற்றும் இரண்டு தோழிகள் மிகவும் திறமைசாலிகள், ஆனால் வாரக் கடைசி விருந்து, போதைப் பொருள் பயன்படுத்துவது என கெட்ட பழக்கங்களையும் உடையவர்கள். ஒரு விருந்தில் கலந்து கொண்டுவிட்டு இரவு நேரத்தில் செல்லும்




போது ஷில்பாவும் அவருடன் இருக்கும் மூன்று தோழிகளும் கடத்தப்படுகிறார்கள். ஒரு பாழடைந்த வீட்டில் அவர்கள் சிறை வைக்கப்படுகிறார்கள். அவர்களைக் கடத்தி வந்தது சிறை வைத்தது நட்டி. ஏன் அவர்களை சிறை பிடித்தார், மாட்டிக் கொண்ட பெண்கள் அங்கிருந்து தப்பித்தார்களா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

கடத்தி வந்த பெண்களிடம் அவர் காட்டும் கோபம், வெறுப்பு, கிண்டல் ஆகியவை எல்லாமே 80களின் தமிழ் சினிமா வில்லன்களைப் போல உள்ளது. விசிலடிப்பது, குளோசப்பில் வந்து பயமுறுத்துவது என நடித்துத் தள்ளியிருக்கிறார். தான் நடித்த 'சதுரங்க வேட்டை' படத்தை அடிக்கடி பார்த்து தனது நடிப்பு என்பது எது என்பதை அவர் தெரிந்து புரிந்து கொள்ளலாம்.

கணனி நிறுவனங்களில் வேலை பார்க்கும் பெண்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும் இப்படி போதை, விருந்து என இருப்பார்கள் என்பதை தமிழ் சினிமாவில் அடிக்கடி காட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அதனால், அந்த வேலைகளுக்கு தங்கள் வீட்டுப் பெண்களை அனுப்பக்கூடப் பலர் தயங்குவார்கள். ஷில்பா மஞ்சுநாத், ஷாஸ்வி பாலா, சுபப்ரியா மலர் ஆகியோரது மூவர் கூட்டணி 'உல்வ் கேங்' என தங்கள் கூட்டணிக்கு பெயர் வைத்துக் கொண்டு அடிக்கடி விருந்து கொண்டாடுகிறார்கள். தங்கள் குடும்பத்தினர் சொல்வதைக் கூட கேட்காதவர்கள்.

கணினி நிறுவனத்தில் தங்கள் வீட்டு பெண்களை வேலைக்கு அனுப்ப வேண்டும் என நினைப்பவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால் அதை மறுபரிசீலனை செய்வார்கள். அந்த அளவுக்கு அவர்களின் செயல்கள் அதிர்ச்சியடைய வைக்கிறார்கள்.

நட்டி எதற்காக அவர்களைக் கடத்திக் கொண்டு வந்து பாழடைந்த வீட்டில் தங்க வைத்து பயமுறுத்துகிறார் என்ற காரணத்தை உச்சக் காட்சி வரை சொல்லாமலேயே இழுக்கிறார் இயக்கு நர். அதற்கான காரணம் தெரிய வரும் போது அது சரியான ஒன்றுதான் என சொல்ல வைத்தாலும் அதற்கு முன்பு ஒன்றரை மணி நேரமாக பயமுறுத்துவதில் மட்டுமே காட்சிகள் நகர்கிறது. திரும்பத் திரும்ப அதுவே மீண்டும் பொறுமையை சோதிக்கிறது.

ஒரே ஒரு பாழடைந்த வீட்டுக்குள் படத்தின் அதிகமான காட்சிகள் இடம் பெற்றுள்ளன. கிறிஸ்டோபர் ஜோசப் அந்த வீட்டை முடிந்த அளவுக்கு பயமுறுத்தக் கூடிய விதத்தில் காட்டியிருக்கிறார். கார்த்திக் ராஜாவின் பின்னணி இசை சுமார் ரகம், பாடல்கள் கவரவில்லை.

குடித்துவிட்டு விபத்து ஏற்படுத்துபவர்கள் மீதும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மீதும் இயக்குநருக்கு உள்ள கோபமும், அவர்களை மாற்ற வேண்டும் என்ற பொறுப்பும் பாராட்டுக்குரியது. அதைத் திரைப்படமாக உருவாக்கி மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று முயன்றிருக்கிறார். எண்ணம் சிறந்தது, அதை வெளிப்படுத்திய விதம்தான் சறுக்கிவிட்டது.

# தனி ஒருவன்

இந்திய அணி அயர்லாந்து சென்றுள்ளது. 3 இருபது - 20 போட்டிகளில் ஆடும் அந்த அணி நேற்று முன்தினம் முதல் போட்டியில் களமிறங்கியது. இதில், மழை குறுக்கிட்டபோதிலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

முதலில் களமிறங்கிய அயர்லாந்து அணி முதலில் சொதப்பினாலும் பின்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கௌரவமான ஓட்டங்களை எடுத்தது. அந்த அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணித் தலைவர் பும்ரா, பிரதிஷ் கிருஷ்ணா, ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து களமிறங்கிய இந்தியா 6.5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 47 ஓட்டங்களை இந்திய அணி எடுத்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுதப்பட்டது. மழை தொடர்ந்து பெய்ததால் போட்டியை மீண்டும் தொடங்க முடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் டக்ளஸ் லூயிஸ் முறைப்படி இந்திய அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனால் 3 போட்டிகள் கொண்ட தொடரில்இந்திய அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. இந்த போட்டியில் ஆட்டநாயகனாக பும்ரா தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் சர்வதேச இருபது - 20 போட்டியில் தலைவராக அறிமுகமான முதல் ஆட்டத்திலேயே, ஆட்ட நாயகன் விருதை வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை பும்ரா பெற்றுள்ளார்.

இந்திய இருபது -20 அணியின் தலைவர்களாக சேவாக், டோனி, ரெய்னா, ரஹானே, விராட் கோலி, ரோஹித் சர்மா, தவான், ரிஷப் பந்த், கே. எல். ராகுல், பாண்ட்யா ஆகியோர் செயல்பட்டுள்ளனர். ஆனால் இந்த சாதனையை பும்ரா மட்டுமே நிகழ்த்தியுள்ளார்.






# 15 ஆண்டுகள்...!

இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட்கோலி. கடந்த 2008 ஒகஸ்ட் 18இல் இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் (தம்புள்ளை) அறிமுகமானார். பின் இருபது-20, டெஸ்ட் போட்டி களிலும் வாய்ப்பு பெற்றார். விளாசல் ஆட்டத்தில் கைதேர்ந்த இவர், இதுவரை டெஸ்டில் 29, ஒரு நாள் போட்டியில் 46, இருபது-20 போட்டியில் ஒரு சதம் அடித்துள்ளார்.

மூன்றுவிதமான கிரிக்கெட்டிலும் சேர்த்து அதிக சதம் அடித்தவர்கள் பட்டியலில் இந்திய ஜாம்பவான் சச்சினுக்குப்பின் (100), 2ஆவது இடம் (76) வகிக்கிறார். தனக்காக (276.57), 'இணைவீரருடன்'(233.48) சேர்த்து 510.05 கிலோமீற்றர் ஓடி ஓட்டங்களை சேர்த்துள் ளார். துணிச்சலாக துரத்தி அணியை வாகை சூட வைப்பார். துரத்தி அடிப்பதில் ஒரு நாள் போட்டிகளில் அதிக சதம் (26) அடித்தவர்களில் முதலிடம் வகிக்கிறார். ஜாம்பவான் சச்சின் (17) அடுத்த இடத்தில் உள்ளார்.

தனிப்பட்ட துடுப்பாட்டம் தவிர, அணியை திறம்பட வழிநடத்தினார். டெஸ்டில் அதிக வெற்றி (40, 68 போட்டி) பெற்ற இந்திய அணியின் திகழ்கிறார். களத்தில் ஆக்ரோஷமாக செயல்படக் கூடியவர். இம்முறை நடக்கவுள்ள உலகக் கிண்ணத்தில் இவரின் சாதனைகள் மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

# மகிழ்வான முடிவு

இங்கிலாந்து அணியின் நட்சத்திர சகலதுறை இருப்பவர் பென் ஸ்ரோக்ஸ். இங்கிலாந்து அணியின் டெஸ்ட் போட்டியின் தலைவரான இவர் 2019ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு மிக முக்கிய காரணமாக இருந்தார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட், 20 ஓவர் போன்ற போட்டிகளில் அணிக்கு மிகவும் பக்க பலமாக இருந்த அவர் ஒருநாள் போட்டிகளில் இருந்து விடைபெறுவதாக கடந்த ஆண்டு அறிவித்து அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி ஓய்வு பெற்றார்.

சமீபத்தில் நடைபெற்று முடிந்த ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்ற பென் ஸ்ரோக்ஸ் அணிக்கு வலுவாக இருந்து சிறப்பாக செயல்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து இந்தியாவில் வரும் ஒக்ரோபரில் நடைபெறவுள்ள 50 ஓவர் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரில் விளையாட வேண்டும் என்று இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் மத்யூவும் கிரிக்கெட் சபையும் கோரிக்கை வைத்திருந்தனர்.

பென் ஸ்ரோக்ஸுடன் பேச்சு நடத்தப்பட்டது. உலகக் கிண்ணத் தொடரில் சம்பியன் கிண்ணத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி இங்கிலாந்து அணிக்காக களமிறங்க பென் ஸ்ரோக்ஸ் சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தகவல் வெளியானது.

அதனை உறுதி செய்யும் வகையில் இங்கிலாந்து அணி நியூசிலாந்துடன் ஒரு நாள் மற்றும் இருபது - 20 போட்டிகளில் விளையாட உள்ள நிலையில், அதற்கான வீரர்கள் பட்டியலை இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அதில் பென் ஸ்ரோக்ஸ் பெயரும் இடம் பெற்றிருக்கிறது. அவர் மீண்டும் அணிக்கு திரும்பியதில் ஒட்டு மொத்த இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களும் ரசிகர்களும் உற்சாகமடைந்துள்ளனர்.



# ஒளி மாசை உருவாக்கும் செயற்கை வெளிச்சம்

- மரு. நா. கங்கா

காற்று மாசு நீர் மாசு ஒலி மாசு போன்றவையுடன் ஒளி மாசும் தற்போது பரவலாக அறியப்படுகிறது. ஒளி இல்லையேல் உயிரினங்கள் வாழ்வது கடினம். பகலில் கதிரவனும் இரவில் நிலவும் உலகிற்கு ஒளி அளித்து வருகின்றன. ஒளியால் கூட மாசு ஏற்படுமா? அது மனிதனின் உடலையும் மனதையும் பாதிக்குமா? அப்படியானால் விலங்குகளுக்கும் பாதிப்புதானே! மொத்த சுற்றுச்சூழலும் தாக்கப்படும் அல்லவா?

மனித குலத்தின் பேராசை சுற்றுச்சூழலில் மிகப் பெரிய நாசத்தை ஏற்படுத்தி வருகிறது. நமது தொழில்கள், பொருளாதாரம், வாழ்வு முறை வசதிகள் ஆகியவை பெருகுவதற்காக இரவையும் பகலாக்கும் வகையில் பலவித விளக்குகள் போடப்படுகின்றன. பல பெரிய ஊர்கள் தூங்காநகரங்கள்தானே! இரவில் உருவாக்கப்படும் செயற்கை வெளிச்சம் இப்போது பெரும் பிரச்னை.

இந்த செயற்கை ஒளியால் ஏற்படும் நோய்கள் மருத்துவர்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றன. செயற்கை ஒளியைக் குறைப்பது ஒன்றே இந்த நோய்களுக்கான தீர்வு. இப்போதைய வாழ்க்கை முறையில் இது சாத்தியமா? ஒளி மாசு உலக அளவில் உள்ள பிரச்னையாக இருக்கிறது. வளர்ந்த நாடுகளில் இதனால் பாதிப்பு அதிகம்.

2016-இல் கணினி மூலம் வரையறுக்கப்பட்ட இரவு நேர ஒளி பற்றிய உலக வரைபடத்தில் இது தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இது வலைதளங்களில் கிடைக்கிறது. இரவில் சைபீரியா, சஹாரா, அமேசான் போன்ற இடங்கள் மட்டும் இருட்டாக இருப்பதும் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், ஆசியா ஆகியவை ஒளியில் மிதப்பதையும் காண முடிகிறது. இவற்றில் கத்தார், குவைத், சிங்கப்பூர் போன்றவை மிகுந்த ஒளி மாசுக்கு உள்ளாகியுள்ளன.

வீடுகளில் விளக்குகளின் வெளிச்சம் தவிர, தொலைக்காட்சி, கைப்பேசி, கணினி போன்றவை மூலமாகவும் இரவில் அதிக வெளிச்சம் ஏற்படுகிறது. சாலை விளக்குகள், வாகனங்களின் விளக்குகள், வணிக நிறுவனங்களின் விளம்பர விளக்குகள் என்று ஒளி மாசுப் பட்டியல் நீள்கிறது.

இரவில் ஏற்படும் அதிக வெளிச்சம், இரவு தூக்கம், பகல் விழிப்பு என்ற இயற்கைத்தன்மையை பாதிக்கிறது. இரவின் அதிக வெளிச்சம், “மெலடோனின்” என்ற ஹார்மோன் சுரப்பைக் குறைத்து விடுகிறது. அதனால் தூக்கமின்மை, தலைவலி, உடல் களைப்பு, மன அழுத்தம்,



பதற்றம் போன்றவை ஏற்படுகின்றன.

நீல ஒளியைத் தரும் கைப்பேசி, கணினி, எல்.ஈ.டி. பல்புகளாலும் மெலடோனின் மிகவும் குறைகிறது. எல்.ஈ.டி. விளக்குகளின் விலையும் மின்சாரச் செலவும் குறைவு. எனவே அவற்றின் பயன்பாடு அதிகரித்திருக்கிறது. இது ஒளி மாசுக்குக் காரணமாக அமைகிறது.

தெருக்களில் உள்ள அதிக வெளிச்சம், திருமணம், பொது நிகழ்ச்சி போன்றவற்றிற்காக போடப்படும் விளக்குகள் வெளிச்சம், நமது வீட்டு அறைக்குள் வரும் தெருவிளக்கின் வெளிச்சம் ஆகிய மூன்று வழிகளில் ஒளி மாசு ஏற்படுகிறது.

ஒளி மாசு ஏற்படுவதால் மனிதர்களுக்கு முக்கியமாக ஏற்படும் பாதிப்பு தூக்கமின்மை.

இது ஒரு நோயா என்று நினைக்க வேண்டாம். தினமும் இரவில் ஒரு மனிதன் குறைந்தபட்சம் 5 அல்லது 6 மணி நேரம் தூங்க வேண்டும். இல்லையெனில் செரிமான பாதை பாதிக்கப்பட்டு பசியின்மை, மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு ஏற்படும். பார்வை திறன் குறைவு, தலைவலி, கண்கள் உலர்ந்து போதல், கண்களில் அரிப்பு ஆகியவை ஏற்படலாம்.

வாழ்வியல் திறன்களான சரியான முடிவு எடுத்தல், விரைவில் பிரச்னைகளைத் தீர்த்தல், பேச்சுத் திறன், எண்ணங்களை சரியாக வெளிப்படுத்துதல், சக மனிதர்களுடன் நட்புறவு போன்றவை பாதிக்கப்பட்டு அதனால் மனித உறவுகள் சிதையக்கூடும்.

விலங்குகளும் ஒளி மாசினால் பாதிப்பு அடைகின்றன. விலங்குகளின் தினசரி விழிப்பு, தூக்கம் சுழற்சி பாதிக்கப்படுகிறது. அவை வாழ்விடங்களை மாற்றிக் கொள்கின்றன. பறவைகளும்கூட இந்த அதிக ஒளியால் பாதிக்கப்படுகின்றன. வாழ்விட மாற்றத்திற்காகப் பறக்கும் போது வானில் வெளிச்சத்தால் குழப்பம் அடைந்து வழி தவறி பல நேரங்களில் இறந்தும் விடுகின்றன.

பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உணவாக இருக்கும் பல பூச்சிகள் விளக்கு ஒளிக்கு அருகில் வரும் போது இறந்து விடுகின்றன. துறைமுகங்களின் அதீத ஒளியால் கடல்வாழ் உயிரினங்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது. ஒளி மாசு குறைவாக இருக்கும் கிராமங்களில் வாழும் பறவைகளைவிட நகர்ப்புறங்களில் வசிக்கும் பறவைகள் அதிகாலையில் சீக்கிரமே விழித்து பறந்து குரல் கொடுக்கின்றனவாம். தூக்கமின்மையால் அவையும் பாதிக்கப்படுகின்றன.

ஒளி மாசு வானவியல் ஆராய்ச்சியை பாதிக்கிறது. தொடர்வண்டி, பேருந்து, மகிழுந்து, விமானம் போன்றவற்றின் இயக்குமுறைகளும் பாதிக்கப்படுகின்றன. ஒரு சோதனையில், இரவு வெளிச்சத்தில் புற்றுநோய் செல்கள் வேகமாக வளர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. பெண்களுக்கு மார்பகப் புற்றுநோயும் ஆண்களுக்கு ப்ராஸ்டேட் கேன்சரும் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இது போன்ற புற்றுநோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடம் விவரங்கள் சேகரித்தபோது அவர்கள் அதிகமாக இரவு வெளிச்சத்தில் இருந்தது தெரியவந்துள்ளது. புற்றுநோய்களுக்கு பல காரணிகள் இருந்தாலும் அதிக இரவு வெளிச்சம் முக்கியக் காரணமாகலாம்.

மனிதர்களின் வளர்சிதை மாற்றம், செரிமானம், இதய செயல்பாடு, நினைவுத்திறன் ஆகியவற்றுக்கு இரவு நேர உறக்கம் கட்டாயம் தேவை. இரவில் அதிக வெளிச்சத்தால் கண்ணில் உள்ள ஒளிவாங்கி நரம்பு அணுக்கள் தூண்டப்படுவதால் ஹார்மோன்கள் சுரப்பது பாதிக்கப்படுகிறது.

நம் தோலில் அதிக ஒளி படும்போது நாம் சூடாக உணர்கிறோம். இது எதிர்மறை உணர்வுகளை அதிகப்படுத்துகிறது. வறட்சி, அரிப்பு , ஒவ்வாமை ஆகியவை ஏற்படுகின்றன.

இன்று ஒளி மாசு ஒரு சர்வதேச பிரச்னையாக மாறி வருகிறது. இதனை குறைக்க ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பைத் தரலாம். வீட்டில் எல்.ஈ.டி. விளக்குகளைத் தவிர்க்கலாம். தொலைக்காட்சி, கணினி, கைப்பேசி போன்றவற்றை இரவு பத்து மணிக்குமேல் பயன்படுத்துவதையும் தவிர்க்க முயலலாம்.

நம்மால் உருவாகிவிட்ட ஒளி மாசு பிரச்னைக்கு நாம்தானே தீர்வு காண வேண்டும்?

---




**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**ஜி. கிருசாந்தன், டிக்கோயா, ஹட்டன்.**

**கேள்வி:** மக்களை ஒடுக்கி அரச பயங்கரவாதத்தை முன்னெடுத்துவரும் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் எந்தவித உடன்பாடோ அல்லது இணக்கப்பாடோ இல்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். ஆனால் ஊடகங்களோ அவர்கள் இணைவதற்காக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று எழுதுகின்றனவே.

வியுக்தியார்: அவர் சொல்வதும் சரி. ஊடகங்கள் சொல்வதும் சரி என்றுதான் இந்த வியுக்தியாருக்கு தெரியவந்தது. அவர் இந்த அரசாங்கத்துடன் உடன்பாடோ இணக்கப்பாடோ இல்லை என்றுதான் சொல்கிறாரே தவிர, ரணிலுடன் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைக்கமாட்டேன் என்று சொல்லவில்லையே. ஊடகங்கள் சொல்வது எதிர்காலத்தில் ரணிலும் சஜித்தும் இணைந்து செயற்படுவதற்காக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதானே. அதைத்தான் சஜித் அணியிலுள்ள பல எம்.பி.க்களும் சொல்கிறார்களே.

---

**எஸ். கார்த்திகேசு திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** “நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டும். கடந்த காலத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தல்களில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை கோமாளித்தனமாக்கியது போன்று, இம்முறை நடந்துகொள்ளக் கூடாது. இன்றைய நிலையில் தமிழ் பொது வேட்பாள ருக்கு மிகவும் பொருத்தமானவர் இரா.சம்பந்தன் மட்டுமே. ஒரு வேளை, அவர் அதனை ஏற்க மறுத்தால், அவரது ஆசீர்வாதத்துடன் பிறிதொருவர் தொடர்பில் சிந்திக்கலாம்.” என்று அரசியல் ஆய்வாளர் யதீந்திரா எழுதியிருக்கிறாரே?

வியுக்தியார்: “ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாற்றான ஒருவரை முன்னிலைப்படுத்தக் கூடிய நிலையில் தென்னிலங்கையில் எந்தவொரு கட்சியும் இல்லை. இல்லாவிட்டால் அனைவருமாக பொது வேட்பாளர் ஒருரையே நிறுத்த வேண்டும். இந்தச் சூழலை தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், தமிழ் மக்களின் வாக்குகளை ஒரு பலமான ராஜதந்திர ஆயுதமாக பயன்படுத்துவதற்கான தந்திரேபாயம் தொடர்பிலேயே, நாம் சிந்திக்க வேண்டும். ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தி, வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் மக்களும் அவருக்கு வாக்களிக்கும் தீர்மானத்தை எடுக்கலாம். இதன் மூலம் வேறு வழியின்றி, தமிழர் தரப்போடு பேரம் பேச வேண்டிய நிர்ப்பந்தம் தென்னிலங்கைக்கு உருவா கும்.” என்று யதீந்திரா முன்வைக்கும் வாதமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக வேட்பாளர்கள் முண்டியடிக்கும் போது நாம் அவர்களுடன் பேரம் பேசும் நிலையில் இருக்கவேண்டாமா?.

---

**இ. கோகுலன் குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** மாறிவரும் உலகிற்கு ஏற்ப எதிர்காலத்தில் இலங்கையில் பிள்ளைகள் இந்தி மற்றும் சீன மொழிகளைக் கற்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** ஜெர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் நமது குழந்தைகள் இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தை கற்றாலும் அங்கு மூன்றாவது மொழி என்றும் ஒரு பாடம் கற்பிக்கப்படுகின்றது. ஜெர்மனியில் குழந்தைகள் பக்கத்துநாடான பிரான்சின் பிரெஞ்சு மொழியையே மூன்றாவது தெரிவாக படிப்பார்கள். அதேபோல பிரான்சில் பிள்ளைகள் ஜெர்மனிய டொச் மொழியை படிப்பார்கள். அதுபோல நாமும் பக்கத்து நாட்டு மொழிகளை படிக்கலாம் என்று சொல்கிறார் என்றுதான் பலரும் நினைத்திருப்பார்கள். ஆனால் அவர் எதிர்காலத்தில் அம்பாந்தோட்டையில் ஒரு அலுவலைச் செய்யவேண்டும் என்றால் சீன மொழி தெரிந்திருக்க வேண்டும், திருகோணமலையில் ஒரு அலுவலைச் செய்யவேண்டும் என்றால் ஹிந்தி தெரிந்திருக்கவேண்டும் என்ற தனது 2048 ஆம் ஆண்டு திட்டத்தை மனதில் வைத்துச் சொல்கிறார் என்று நினைக்கிறேன்.

---

**எஸ். நிதர்சன், மிருசுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** 13ஆம் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் இன்றும் நாளையும் ஒரே நிலைப்பாட்டையே நாம் கொண்டுள்ளோம் என்றும் ஒன்றிணைந்த நாட்டுக்குள் 13ஆவது திருத்த சட்டத்தின் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்க்கிறது என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** பதின்மூன்றுக்கு எதிராக தனது தந்தை எடுத்த கடுமையான நிலைப்பாட்டில் அவர் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், ஒரு விடயத்தை கவனித்தீர்களா? மனுசன் மிகக் கவனமாகத்தான் சொல்லியிருக்கிறார். எந்தக் கட்டத்திலும் 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. பதின்மூன்றை அமுல்படுத்தவேண்டும் என்று எல்லோரும்தானே சொல்கிறார்கள். அதாவது பொலிஸ், காணி அதிகாரம் இல்லாமல். அதைத்தான் அவரும் சொல்கிறாரோ தெரியவில்லையே.

---

**சு. சதீஸ்குமார், கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் குடும்பத்தை வைத்து அரசியல் செய் வதை உடனடியாக நிறுத்துமாறு புலம்பெயர் தமிழர்களிடம் முன்னாள் இராணுவத் தளப தியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளாரே.

**வியுக்தியார்:** பயந்தவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று ஒரு பழமொழி இருக்கிறதே தெரியாதா? எங்கே பிரபாகரன் குடும்பத்தினர் அரசியல் செய்ய வந்துவிடுவார்களோ என்ற பயம்தான் போலும். நம்மவர்களுக்குத்தான் அந்தப் பயம் இருக்கிறது என்றால் தங்களுக்கும் இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார் பீல்ட் மார்ஷல்.

## மின்சார...

முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால், அமைச்சரை சந்திப்பதற்கான வாய்ப்புகள் இதுவரை கிடைக்கவில்லை.

பலமுறை அமைச்சின் செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளை சந்தித்து தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி இவர்கள் கோரிக்கைகளை விடுத்திருந்த போதிலும் அதற்கு எவ்வித பதில்களும் வழங்கப்படவில்லை.

நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால் காப்புறுதித் திட்டத்தில்கூட இவர்கள் உள்வாங்கப்படவில்லை.

நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட நிரந்தர நியமனம் வழங்கப்படாத மின்சாரத்துறை ஊழியர் ஒருவர், எமக்கு தினசரி சம்பளம்தான் வழங்கப்படுகிறது. 1710 ரூபாதான் எமக்கு சம்பளமாக வழங்கப்படுகிறது.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் இந்த சம்பள முறையில் எமக்கு பயணிக்க முடியாது. காப்புறுதித் திட்டம் இல்லாமையால் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளோம்.

பணிநேரத்தில் ஒரு உழியர் உயிரிழந்தால் அல்லது காயமுற்றால் எமக்கு எவ்வித பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லை.“-என்றார்.

கொழும்பில் அமைந்துள்ள மின்சார சபையின் தலைமையகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

## வறட்சியால்...

யாழ்ப்பாணத்தில் வறட்சியால் 21 , 999 குடும்பங்களை சேர்ந்த 70,238 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட அராலி, பொன்னாலை பகுதிகளில் சிறு கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு பிடிக்கப்படும் இறால், நண்டு, சிறு மீன்களின் அளவு வெகுவாக குறைவடைந்துள்ளமையினால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னாரில் 952 குடும்பங்களை சேர்ந்த 3244 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களை சேர்ந்த 685 பேரும் வவுனியாவில் 450 குடும்பங்களை சேர்ந்த 1120 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, வட மாகாணத்தில் வறட்சியால் 23 ,603 குடும்பங்களைச் சேர்ந்த 75,287 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 18,951 குடும்பங்களை சேர்ந்த 63,136 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8892 குடும்பங்களை சேர்ந்த 29,508 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 7739 குடும்பங்களை சேர்ந்த 25,891 பேரும் திருகோணமலை மாவட்டத்தில் 2320 குடும்பங்களை சேர்ந்த 7737 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மேல் மாகாணத்தில் 5219 குடும்பங்களை சேர்ந்த 17,073 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களில் புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த 2321 பேர் உள்ளடங்குகின்றனர்.

வறட்சியான காலநிலையால் மேல் மாகாணத்தில் 2890 பேரும் தென் மாகாணத்தில் 7512 பேரும் மத்திய மாகாணத்தில் 1215 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் 469 குடும்பங்களை சேர்ந்த 1809 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் 329 குடும்பங்களைச் சேர்ந்த 1324 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன் ஒரு வருட காலப்பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தியர்களும் தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இதனால் பொதுமக்கள் பாரிய அசௌகரியத்தினை எதிர்நோக்கி இருந்தனர்.

தற்போது மருந்துத் தட்டுபாடு தொடர்பான பிரச்னை ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளபோதிலும் ஒரு சில மருந்துகள் மற்றும் விசேட வைத்தியத்திற்காக வழங்கப்படும் மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

## கணிதப்...

2020 க.பொ.த உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றவர் இவர். மொறட்டுவ பல்கலைக்கழக அனுமதி கிடைத்து, அங்கு கல்வி பயிலச் சென்றிருந்தார்.

எனினும், இந்த வருடத்தில் தன்னால் கல்வியை தொடரச் சிரமமாக இருப்பதாக குறிப்பிட்டு, அடுத்த வருடத்திலிருந்து பல்கலைக்கழக கல்வியை தொடர விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மனஅழுத்தத்திற்கான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் தனது வீட்டில் தற்கொலை செய்துள்ளார். அவரது பெற்றோர்கள் இருவரும் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சுகாதார...

வைத்தியசாலைகளுக்கு முன்பாக 10 இலட்சம் கையொப்பங்களைப் பெறுவதற்கான பணிகளை ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுத்து வருகிறது.

அதன் ஒருகட்டமாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவின் தலைமையின் கையொப்பம் திரட்டும் நிகழ்வு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன,

“தரம் குறைந்த மருந்துகளால் நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் சுகாதார அமைச்சு பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதாரக் கட்டமைப்பு மோசமடை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவே காரணமாக இருப்பதால் அருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளது“ எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை தொகுதி அமைப்பாளர் அஜித்.பி பெரேராவின் ஏற்பாட்டில் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான கையொப்பம் திரட்டும் நிகழ்வு நேற்று முன் தினம் களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

களுத்துறை போதனா வைத்தியசாலையில் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக வந்த பெருந்தொகையான நோயாளர்களும் மற்றும் பிரதான வீதியில் பயணித்த மக்களும் இந்த கையெழுத்துப் பத்திரத்தில் கையொப்பமிட்டனர்.

முறையான சுகாதார சேவையை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், சுகாதார சேவையிலிருந்தும் சுகாதார அமைச்சர் இராஜினாமா செய்ய வேண்டும் வலியுறுத்தி இந்த கையெழுத்து திரட்டும் வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (அ)

## செம்மணி...

சேர்ந்த இளைஞரே உயிரிழந்தார்.

மன்னாரை சேர்ந்த 26 வயதான மனைவி உயிராபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (அ)

## சர்வதேச...

வழங்குவதற்கு தயாராக இருந்தவர்கள் யுத்தம் முடிந்த பிறகு எதனையுமே கொடுக்கக்கூடாது என்ற நிலைக்கு வருவதாக இருந்தால், அவ்வாறானவர்களுடன் பேசுவதில் அர்த்தம் இல்லை.

பெரும்பான்மை அரசியல் தலைமைகளிடையே உள்ள முரண்பாடான நிலைமைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் வடக்குக்கு பொலிஸ் அதிகாரங்கள், காணி அதிகாரங்களைக் கொடுத்தால் நாடே பிளவுபடும் எனும் பிழையான இனவாத கருத்துகள் மீண்டும் மீண்டும் திணிக்கப்படுகின்றன.

நாட்டில் நிரந்தரமான ஒரு பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்-என்றார். (அ)

## பொதுப்...

கடனை வழங்கிய உரிமையாளர் நாடாகும்.

இலங்கையின் வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக ஜப்பான்,இந்தியா மற்றும் பிரான்ஸ் நாடுகள் இணைந்து பொது மேடையை உருவாகியுள்ளதுடன் சீனா கண்காணிப்பு மட்டத்தில் அதில் கலந்துகொண்டு வருகிறது.

அண்மையில் குறுகிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்காக சீனாவில் உதவியை பெற்று தர தலையீடுகளை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

இதற்கு மேலதிகமாக நிதியமைச்சின் அதிகாரிகள், ஜனாதிபதி மற்றும் அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த பிரதமர் உள்ளிட்டோர் வெளிநாட்டு கடனை மறுசீரமைக்கும் செயற்பாட்டுக்கு உதவுமாறு சீனாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். எவ்வாறாயினும் கடன் மறுசீர மைப்பு என்ற வார்த்தையைக்கூட சீனா நிராகரித்துள்ளதுடன் கடன் முகாமைத் துவம் என்ற வார்த்தையே மிகவும் பொருத்தமானது கூறியுள்ளது.

இலங்கை சீனாவுக்கு 7.4 பில்லியன் டொலர் கடனை செலுத்த வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மாகாண...

ஊடாகக் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம். இந்தப் 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு 36 ஆண்டுகள் கடந்திருந்தா லும் இலங்கை அரசியலமைப்பிலிருக் கும் இந்தச் சட்டம் இன்னும் முழுமை யாக அமுல்படுத்தப்படாமல் இருக் கின்றது. அந்த வகையில் இந்த நாட்டில் மாறி மாறி அரசாங்கத்தைக் கைப்பற்றி ஆண்டு கொண்டிருக்கும் கட்சிகளும், தலைவர்களும் இலங்கையின் அரசியலமைப்பையே மீறிக் கொண்டிருக்கின்ற சட்டவிரோதமான நடவடிக்கையைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்து அனுமதியைப் பெறவேண்டும் என்று கூறுகின்றார். உண்மையிலேயே அன்று 1987 இல் 6 இல் 5 பெரும்பானமையைக் கொண்ட பாராளுமன்றத்தில் தான் இந்த 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அது மாத்திரமல்ல அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் உட்பட அக்கட்சியின் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் இருக்காத நிலையில் ஒட்டுமொத்த சிங்களப் பிரதிநிதிகளை மாத்திரம் வைத்தே 6 இல் 5 பெரும்பான்மையாக நிறைவேற்றப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் ஒரு தடவை பாராளுமன்றத்திற்குக் கொண்டுபோக வேண்டிய தேவை இருக்காது.

ஆனால் 13ஆவது திருத்தச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து சிங்கள மக்கள் மத்தியில் இன்று செல்லாக் காசுகளாக இருக்கும் அரசியல் வாதிகளைத் தட்டியெழுப்பி இனங்களுக்கடையிலே மேதலை, முறுகலை ஏற்படுத்தி மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலைக்கு ஜனாதிபதி கொண்டு வந்திருக்கின்றார் என்றே எண்ணத் தோணுகின்றது.

அதுமாத்திரமல்லாமல் தற்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்கவேண்டும் என்றும் சிங்கள இனவாதிகள் கூறுகின்றார்கள். இந்தப் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் அதனூடாக ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையையும் இல்லாதொழிப்பதற்கான சட்டம் அவர்களால் பாராளுமன்றத்தில் கொண்டுவரட்டும். அதற்குப் பின்னர் இந்த நாடு எந்த நிலைமைக்குச் செல்கின்றது என்பதை அவர்களே உணர்ந்து கொள்வார்கள்.

இந்தப் 13ஆவது திருத்தச்சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தாது ஜனாதிபதி நீண்ட காலமாக இழுத்தடிப்பதென்பது ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் தங்களை ஆழக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிய வேண்டும். ஆனால் இன்று மாகாண சபைத் தேர்தலை நடத்தாது மாகாண சபைகளுக்கு நிபுணர் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார். அதற்கு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் உட்பட சில கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

மாகாண சபைகளுக்கு நிபுனர் குழுவை அமைப்பதென்பது மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான தந்தரமே ஒழிய இதன் மூலம் வேறு எதுவுமே சாதிக்க முடியாது. மாகாணத்திற்கும், மத்திக்கும் இடையிலான அதிகாரங்களை எவ்வாறு பகிர்வது என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்த மாகாண நிபுனர் குழு அமைப்பதாகக் கூறுகின்றார்கள். ஆனால் அதிகாரங்கள் எவ்வாறு பகிரப்படவேண்டும் என்பது 13ஆவது திருத்தச் சட்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரம் தொடர்பிலும் அதில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகாணப் பொலிஸ் ஆணைக்குழுவில் மாகாண முதலமைச்சரின் பிரதிநிதி, மத்திய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதிநிதி, அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதி என மூவர் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இங்கு சிலருக்கு வரலாறு தெரியாது.

1988ஆம் ஆண்டு இறுதியில் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாண சபையிலே பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆனந்த ராசாவை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த பிறேமதாஸ நியமித்திருந்தார். அவரின் கீழ் 3000 மாகாண பொலிஸாாா்களை நியமிப்பதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டு மீளப் பெறப்பட்டிருக்கின்றது என்பது தான் உண்மை.

அந்த வகையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கு ஒரு நிபுணர் குழுவை ஜனாதிபதி நியமிப்பதென்பது இந்த நாட்டு மக்களை மாத்திர மல்லாமல் சர்வதேசத்தையும், குறிப்பாக இந்தியாவையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே நாங்கள் பார்க் கின்றோம் - என்றார். (அ)

# பாரிஸ் ஒலிம்பிக்ஸ் 2024:

## விளையாட்டில் ஏன் அரசியல் தலையீடு?

## ரஷ்யாவிற்கு தடையா ? உக்ரைன் புறக்கணிக்குமா?




விளையாட்டில் அரசியல் தலையீடு தேவையற்றது எனக் கருதப்பட்டாலும், காலங்காலமாக சர்வதேச அரங்கில், முக்கியமாக ஒலிம்பிக் போட்டிகளில் பகிஷ்கரிப்பும், புறக்கணிப்பும் தொடர்ந்து வருகிறது.

1980களில் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா பகிஷ்கரித்ததும், பின்னர் 1984இல் அமெரிக்காவில் நடந்த போட்டிகளை ரஷ்யா புறக்கணித்ததும் வரலாறு.

தற்போது பாரிஸ் ஒலிம்பிக்கில் ரஷ்யாவிற்கு தடையா அல்லது இந்த ஒலிம்பிக் போட்டிகளை உக்ரைன் புறக்கணிக்குமா எனும் ஐயங்களும் எழுந்துள்ளன. பிரான்சில் திட்டமிட்டபடி நடைபெறவிருக்கும் 33 ஆவது கோடைக்கால ஒலிம்பிக்ஸ் தொடருக்கான பாரிய அளவில் ஆயுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. லண்டனுக்கு அடுத்தபடியாக, மூன்று முறை கோடைக்கால ஒலிம்பிக்ஸை நடத்தும் இரண்டாவது நகரமாக பாரிஸ் தற்போது திகழ்கிறது.

ஒலிம்பிக்ஸ் விளையாட்டில் ஏன் அரசியல் தலையீடு எனும் விவாதங்களுடன் இம்முறை பாரிஸ் ஒலிம்பிக்கில் ரஷ்யாவிற்கு தடை விதிக்கப்படும் என முதலில் இருந்தது. ஆயினும் ரஷ்யா பங்கேற்பதால் இந்த ஒலிம்பிக் போட்டிகளை உக்ரைன் புறக்கணிக்குமா என தற்போது ஊகிக்கப்படுகிறது.

**நூறு ஆண்டுகளின் பின் களைகட்டும் பாரிஸ் ஒலிம்பிக்ஸ்**

இதுவே பிரான்ஸ் நாடு நடத்தும் ஆறாவது ஒலிம்பிக்ஸ் போட்டி. 2024 ஜூலை 26 அன்று ஒலிம்பிக்ஸிற்கான தொடக்க விழாவை, பாரிஸ் நகரில் உள்ள செய்ன் நதிக்கரையில் சுமார் மூன்று மணி நேரம் நடத்துவதற்காகத் திட்டமிட்டுள்ளனர்.

ஒலிம்பிக்ஸின் நூற்றாண்டு விழாவாக இதைக் கொண்டாடும் வகையில், தொடக்க விழாவில் நூறு படகுகள், விளையாட்டு வீரர்களை ஏற்றிக் கொண்டு பாண்ட் டி ஆஸ்டர்லிட்ஸில் தொடங்கி ஈபிள் கோபுரம் வரை அழைத்துச் செல்லவுள்ளது. இப்போட்டி 26 ஜூலை 2024அன்று தொடங்கி 11 ஆகஸ்டு 2024 வரை நடைபெறும். பாரிஸின் முக்கியச் சுற்றுலா தளங்களான வெர்செய்ல்ஸ் அரண்மனை, ஈபிள் கோபுர மைதானம் ஆகியவையும் இதில் இடம்பெற்றுள்ளன.

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இடம் பெறவிருக்கும் பாரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க உள்ள நாடுகள் பட்டியலில் ரஷ்யாவும் பெலாரஸூம் நீக்கப்பட்டுள்ளதாக முதலில் அறிவிக்கப்பட்டது. ஆயினும் தற்போது ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்கள் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதற்கு முன்பாக ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க அழைக்கப்பட்ட 203 நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவும் பெலாரஸூம் இல்லை என்று கடந்த வருடம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்தும் இருந்தது. இந்த நாடுகளைச் சேர்ந்த விளை யாட்டு வீரர்கள் நடுநிலையாளர்களாக ஒலிம்பிக்கில் பங்கேற்க அனுமதி பெற லாம். எனினும், இது குறித்து பின்னர் முடிவு எடுக்கப்படும் என ஐஓசி முன்னர் தெரிவித்தது.

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தாமஸ் பாக் கூறுகையில், அமைதியான போட்டியில் உலகம் முழுவதையும் ஒன்றிணைப்பதே ஒலிம்பிக் போட்டிகளின் நோக்கம் ஆகும்.

உலகில் மோதல்கள், பிளவுகள் மற்றும் போர்கள் அதிகரித்து வரும் நிலையில் இந்த ஒன்றிணைக்கும் சக்தி முன்னெப்போதையும் விட அதிகமாக தேவைப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

இந்த பாரிஸ் ஒலிம்பிக் பாலின சமத்துவம் கொண்ட முதல் ஒலிம்பிக் போட்டி இதுவாகும். ஆண்களுக்கும்



பெண்களுக்கும் ஒரே எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல்முறையாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் ‘பிரேக் டான்ஸ்’ என்கிற நடனத்தையும் அறிமுகப்படுத்த உள்ளனர். இது பாரிஸில் 100 ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் கோடைக்கால ஒலிம்பிக் தொடர் என்பதால் உலக அரங்கில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

**பாரிஸ் ஒலிம்பிக் உக்ரைன் புறக்கணிப்பா ?**

உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு, ரஷ்யா மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் பல சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளில் இருந்து தடை செய்யப்பட்டனர். ஆயினும் இந்த ஆண்டு சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. 2022 தடைக்குப் பிறகு இந்த ஆண்டு விம்பிள்டன் போட்டியில் பங்கேற்க ரஷ்ய மற்றும் பெலாரஷ்ய வீரர்கள் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்கள் பாரிஷ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. ரஷ்ய, பெலாரஸ் வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டால், பாரிஸ் ஒலிம்பிக் விழாவை பகிஷ்கரிப்பதாக உக்ரைன் எச்சரித்திருந்தது. உக்ரைனைப் போல இந்த ஒலிம்பிக் போட்டியை 40 நாடுகள் புறக்கணிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தினால் ரஷ்யா போட்டிகளில் கலந்து கொள்ளும் என வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பை போலந்து, லித்துவேனியா, எஸ்டோனியா, லட்வியா ஆகிய நாடுகள் கூட்டாக நிராகரித்துள்ளன. இதனையடுத்து, சுமார் 40 நாடுகள் வரை ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்கக்கூடும் எனவும் அவ்வாறு இடம்பெற்றால், ஒலிம்பிக் நிகழ்வுகள் அர்த்தமற்றதாகும் எனவும் போலந்தின் விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கமில் போர்ட்னிசுக் குறிப்பிட்டுள்ளார்.

**பிரான்ஸில் ஆறாவது ஒலிம்பிக்ஸ் போட்டி**

பிரான்ஸ் நாடு நடத்தும் ஆறாவது ஒலிம்பிக்ஸ் போட்டி இதுவாகும். 2024 ஜூலை 26 அன்று இதற்கான தொடக்க விழாவை, பாரிஸ் நகரில் உள்ள செய்ன் நதிக்கரையில் சுமார் மூன்று மணி நேரம் நடத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பால் நடத்தப்படும் கோடைகால ஒலிம்பிக்ஸ் 33-ஆவது முறையாக அடுத்த ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற உள்ளது.

ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெற இன்னும் ஓராண்டே உள்ள நிலையில், பிரான்ஸ் நாட்டின் ஒலிம்பிக் கமிட்டி, டோனி எஸ்டாங்குவே தலைமையில் ஒலிம்பிக்ஸ் மற்றும் பாராலிம்பிக்ஸ் போட்டிகள் நடக்கவிருக்கும் இடங்களுக்கான அட்டவணையை வெளியிட்டுள்ளது.

பெரும்பாலான போட்டிகள் பாரிஸ் நகரில் நடக்கவிருக்கின்றன. ஏனைய போட்டிகள், தென் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள பிரெஞ்சு நாட்டின் கடல்கடந்த கூட்டமைப்பான பிரெஞ்சு பாலினீசியாவில் நடைபெறவுள்ளன.

